விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 263 வள்ளுவர் ஆண்டு 2054 ஆவணி 22 வெள்ளிக்கிழமை (08.09.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

சிறுமிக்கு நீதி கோரி

## யாழ்.போதனாவுக்கு முன் கவனயீர்ப்புப் போராட்டம்



06 ஆம் பக்கம் பார்க்க

சிறுமியின் கை அகற்றப்பட்ட விவகாரம்

## தாதிக்கு பயணத் தடை

10 ஆம் பக்கம் பார்க்க




## வைத்தியர்கள் தவறிழைத்திருந்தால் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை

சிறுமியின் கை அகற்றப்பட்ட விவகாரம் தொடர்பில் சுகாதார அமைச்சு

15 ஆம் பக்கம் பார்க்க

தமிழ் மொழியில் பிழை

## கோட்டாவின் அறிக்கை கிளம்பியது சர்ச்சை



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கடிதத் தலைப்பில் தமிழ் மொழிக்கு ஏற்பட்ட இழுக்கு 15

## மாங்குளம் பகுதியில் வெடிப்புச் சம்பவம்

இருவர் படுகாயம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டம் மாங்குளம் பகுதியில் இனம்காணப்படாத வெடிப்பு சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளதுடன் சம்பவத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

மாங்குளம் நீதிபுரம் பகுதியைச் சேர்ந்த இருவரும் விறகு எடுப்பதற்காக சென்ற 15

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி

# இரண்டு மனித எச்சங்கள் மீட்பு

(முல்லைத்தீவு)

- பெண்களின் உள்ளாடைகளுடன் இரு துப்பாக்கிச் சன்னங்கள் மீட்பு.
- இன்றும் அகழ்வுப் பணி தொடர்ந்து முன்னெடுக்கப்படும்.

(02ஆம் பக்கம் பார்க்க)





## சனல் 4 இன் ஆவணப்படம் ஜெனிவாவுக்கான நாடகம்

அவசரப்பட தேவையில்லை – ரணில்



(கொழும்பு)

சனல் 4 இன் ஆவணப் படம் ஜெனிவாவுக்கான நாடகம். இதற்கு அவசரப்பட்டு எந்த நடவடிக்கையும் எடுக்கத் தேவையில்லை என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அமைச்சரவையில் சனல் 4 ஆவணம் தொடர் 15

சிறுமியின் கை அகற்றப்பட்ட விவகாரம்

## மருத்துவ வல்லுநர்களின் ஆலோசனை கேட்ட நீதிமன்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற 8 வயது சிறுமியின் இடது கை மணிக்கட்டுடன் அகற்றப்பட்டமை தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துள்ள தகுதி வாய்ந்த மருத்துவர்கள் குழு சார்பில் மருத்துவ வல்லுநரின் ஆலோசனையை நீதிமன்றுக்கு முன்வைக்கு 16

## ஹெரோயினுடன் யாழ்.நகரில் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

ஹெரோயின் போதைப் பொருளுடன் யாழ்.நகரில் வைத்து தென் பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் நேற்று வியாழக்கிழமை முற்பகல் கைது செய்ய் 15

சாவகச்சேரியில் மருந்து எடுப்பதற்காக

## வைத்தியசாலை சென்றவர் மயங்கி விழுந்து மரணம்

(சாவகச்சேரி)

மருந்து எடுப்பதற்காக சாவகச்சேரி ஆதார வைத்திய சாலைக்கு சென்ற முதியவர் ஒருவர் வைத்தியசாலையில் மயங்கி விழுந்து உயிரிழந்துள்ளார்.

நேற்று வியாழக்கிழமை சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் வெளி நோயாளர் பிரிவில் இச் சம்பவம் இடம்பெற்றுள் 15

## வீதியில் செல்வோரிடம் அலைபேசிகள் வழிப்பறி

போதைக்கு அடிமையான இரு பல்கலைக்கழக மாணவர்கள் யாழில் கைது

(யாழ்ப்பாணம்)

வீதியில் செல்வோரிடம் அலைபேசிகளை வழிப்பறி செய்தனர் என்ற குற்றச்சாட்டில் பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

போதைப்பொரு 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இலங்கையின் பிரச்சினையை உள்நாட்டிலேயே தீர்க்க

# புலம்பெயர் தலைவர்களுடன் பேச்சுவார்த்தைக்கு அரசு தயார்

## நீதி அமைச்சர் விஜயதாச

(கொழும்பு)

இலங்கையில் காணப்படும் பிரச்சினைகளுக்கு உள்நாட்டிலேயே தீர்வு காண்பதற்கு இலங்கை அரசாங்கம் புலம்பெயர் தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்துள்ளதாக நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

உள்நாட்டு பிரச்சினைகளை சர்வதேச சமூகத்திடம் கொண்டு செல்ல முயற்சிக்காது இலங்கையர்களாக அனைவரும் ஒன்றிணைந்து தீர்வு காண முயற்சிக்க வேண்டுமென கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின் போது விஜேயதாச ராஜபக்ச வலியுறுத்தியுள்ளார்.

மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழு அறிக்கைகளை வெளியிடும் போது, அது சம்பந்தப்பட்ட வேறு சில தரப்பினரின் நிகழ்ச்சி நிரல்களும் இலங்கையில் செயல்படுத்தப்படும்.

இலங்கைக்கு எதிராக பல சக்திகள் தற்போதும் செயற்பட்டுக் கொண்டு இருக்கின்றன. கடந்த காலங்களில் இலங்கையில் இடம்பெற்ற யுத்தத்தை அரசாங்கம் நிறைவுக்கு கொண்டு வந்திருந்தது.

இதனையடுத்து, புலம்பெயர் அமைப்புக்கள் இலங்கைக்கு எதிராக பல நடவடிக்கைகளை எடுத்தது. இது தொடர்பில் இரு தரப்பினரது பக்கமிருந்தும் நாம் சிந்திக்க வேண்டியுள்ளது.

இந்த பிரச்சினைகள் நாளாந்தம் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. இவற்றை கருத்தில் கொண்டு நாம் புலம்பெயர் தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்துள்ளோம்.

இதனை தொடர்ந்து, மக்கள் மத்தியில் சமாதானத்தை கட்டியெழுப்பி தற்போதுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் நடவடிக்கையை ஆரம்பிக்கவுள்ளோம்.

இது தொடர்பான பல திட்டங்களையும் நாம் செயல்படுத்தியுள்ளோம். காணாமல் போனோர் தொடர்பான அலுவலகம், நல்லிணக்கம் மற்றும் சமாதானம் தொடர்பான அலுவலகம் உள்ளிட்ட பல திட்டங்களை நாம் முன்னெடுத்துள்ளோம்.

இலங்கையில் உள்ள மக்களாகிய எமக்கிடையில் பிரிவுகள் ஏற்பட்டால் அதனை சர்வதேச சமூகம் அவர்களுக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்வார்கள்.

எமக்கிடையில் ஒற்றுமையிருந்தால் சர்வதேச நாடுகளும் அமைப்புக்களும் இலங்கையின் விடயங்களில் தலையிடாது என தெரிவித்துள்ளார். (ம-7,9)

### நெல்லியடி பகுதியில்

## ஹெரோயின், வாள்களுடன் நடமாடியவர் கைது

நெல்லியடி பகுதியில் ஹெரோயின் போதைப் பொருள் மற்றும் வாள்களுடன் நடமாடிய ஒருவர் சிறப்பு அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டார்.

நேற்று மாலை அதே இடத்தைச் சேர்ந்த 33 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபரிடமிருந்து 3 கிராம் 80 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருள் மற்றும் 3 வாள்கள் என்பன கைப்பற்றப்பட்டன.

மேலதிக விசாரணைகளின் பின் இன்று பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் சந்தேகநபர் முற்படுத்தப்படுவார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ம-7,9,33)

**Romania வேலைவாய்ப்பு விசா**

Romania நாட்டில் Electrician மற்றும் தொழிற்சாலை வேலைவாய்ப்புக்கள் உள்ளன. ஐரோப்பிய நாடுகளுக்கும் கனடாவிற்குமான Tour Visa தேவைப்படுபவர்கள் தொடர்புகொள்ளவும்.

Hybrid International hub (pvt) Ltd, Jaffna

(வேம்படி மகளீர் கல்லூரி அருகில்) (C-7204)

021 222 1265,076 250 0098

### இரண்டு...

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வுப்பணியின் போது நேற்று பெண்களின் உள்ளாடைகளுடன் இரண்டு மனித சடல எச்சங்களும், இரு சன்னங்கள் உள்ளிட்ட சில தடயபொருட்களும் மீட்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியின் இரண்டாம் நாள் அகழ்வு நேற்று முல்லைத்தீவு நீதவான் நீதிமன்ற நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில் தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவ தலைமையிலான குழுவினரால் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

இரண்டாம் நாள் அகழ்வுப் பணிகளில் இரண்டு மனித உடல்களின் மனித எச்சங்கள் பகுதியளவில் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளதுடன், இரண்டு துப்பாக்கிச் சன்னங்கள், துப்பாக்கிச் சன்னங்கள் துளைத்த ஆடைகள் உள்ளிட்ட பல்வேறு தடையப் பொருட்களும் அகழ்வின் போது மீட்கப்பட்டுள்ளன.

குறித்த இரண்டாம் நாள் அகழ்வுப் பணி தொடர்பில் முல்லைத்தீவு சட்டவைத்திய அதிகாரி கே.வாசுதேவா கருத்துத் தெரிவிக்கையில்,

இரண்டாம் நாள் அகழ்வுப் பணிகளில் இரண்டு மனித உடல்களின் எச்சங்கள் பகுதியளவில் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளதுடன், துப்பாக்கிச் சன்னங்கள் எனச் சந்தேகிக்கப்படும் இரண்டு உலோகத் துண்டுகளும் வேறு சில ஆதாரப் பொருட்களும் மீட்கப்பட்டுள்ளன.

இவ்வாறு பகுதி அளவில் இதுவரை எடுக்கப்பட்ட மனித எச்சங்களில் துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டமைக்கான அடையாளங்கள் எவையும் இல்லை. இருப்பினும் மீட்கப்பட்ட ஆடைகளில் துப்பாக்கிச் சன்னங்கள் பட்டிருப்பதற்கான அடையாளங்கள் காணப்படுகின்றன.

எது எவ்வாறாயினும் இவற்றை விரிவாக ஆராய்ந்து, பகுப்பாய்வுகள் மேற்கொள்ளப்பட்ட பின்னரே இதுதொடர்பில் கூறமுடியும் என்றார்.

மேலும் குறித்த அகழ்வுப் பணி இடம்பெறும் இடத்தில் யாழ்ப்பாண மாவட்ட சட்டவைத்திய அதிகாரி, சட்டத்தரணிகளான கே.எஸ்.நிரஞ்சன், ரனித்தா ஞானராசா, தடையவியல் பொலிஸார், பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், சமூக செயற்பாட்டாளர் அன்ரனி ஜெயநாதன் பீற்றர் இளஞ்செழியன் உள்ளிட்டவர்களும் பிரசன்னமாகியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ம-7,9)

**Birthday Remembrance**



Born 08 . 09 . 1926

Death 09 . 04 . 2006

In Loving and pleasant memory of late

**S.A. Gunaratnam**

Senior medical Laboratory Technician Served at M.R.I Borella
He have been to Japan on Scholarship,
member of colombo Tennis Club, until late 1990.
He rendered his service at G.H. Jaffna fondly
remembered, What you have been in medical field.
*" Eternal rest unto him"*
*"Perpetual light shine upon his Soul"* (16979)

**வலம்புரி**

விளம்பரத் தொடர்புகளுக்கு

076 636 3378
076 097 3127

**உளமாரப் பாராட்டி வாழ்த்துகிறோம்**




எமது கல்லூரியின் பழைய மாணவர் சங்கத் தலைவர்

பேராசிரியர்

**சிறிசற்குணராசா**

அவர்கள் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக மீண்டும் இரண்டாவது தடவையாகவும் நியமனம் பெற்றமையையிட்டு பெருமகிழ்ச்சி அடைவதோடு பேராசிரியர் அவர்களின் பணி மேன்மேலும் சிறந்தோங்க அவரை உளமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**பழைய மாணவர் சங்கம்**
**யா/உடுப்பிட்டி அ.மி.கல்லூரி**

(C-7212)

**நாகபூஷணி திருமண சேவை**

MBBS, BSC Civil Engineering, BSC, MSC, LLM,
IT Professionals, CIMA, BBA, MBA, BA

கற்று வேலை செய்பவர்கள் மற்றும் Teachers, govt Jobs, உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் எம்மிடம் ஏராளமாக உள்ளனர். மிகப் பொருத்தமான மணமக்கள் ஜாதகங்கள் எம்மால் தெரிவு செய்யப்பட்டு உடன் தரப்படும். (C-7188)

264, ஆடியபாதம் வீதி,
கொக்குவில் கிழக்கு, யாழ்ப்பாணம்.

021 222 9306, 077 138 7596, 071 999 9306

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு வைத்தியரை உருவாக்க 4 மில்லியன் செலவாகின்றது

## நிதி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஒரு வைத்தியரை உருவாக்க இந்நாட்டின் வரி செலுத்துபவர்கள் அண்ணளவாக 4 மில்லியன் ரூபாவை செலவு செய்வதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய நேற்று தெரிவித்துள்ளார்.

ஒரு மருத்துவ மாணவர் பல்கலைக்கழகத்தில் 5 வருட கல்வியை நிறைவு செய்ய, மக்கள் 4,092,915 ரூபாவை செலவு செய்ய வேண்டியுள்ளதாக அமைச்சர் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.


"இது மாதத்திற்கு 68, 215 ரூபாய்" என சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் தெரிவித்தார்.

அதேபோல் ஒரு பொறியியல் மாணவருக்காக 2.1 மில்லியன் ரூபாயும் முகாமைத்துவ மாணவர்களுக்காக 1 மில்லியன் ரூபாயும் கலைப்பீட மாணவருக்கு 1.3 மில்லியன் ரூபாவையும் வரி செலுத்துபவர்கள் செலவழிப்பதாக அவர் தெரிவித்தார். கேகாலை வைத்தியசாலையின் வைத்திய அதிகாரிகள் நாட்டை விட்டு வெளியேறும் சம்பவம் தொடர்பில் குறிப்பிடும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (நி)

# சனல் 4 அம்பலப்படுத்தியதை மறுத்த கோட்டாபய

(கொழும்பு)

**உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக பிரித்தானிய தொலைக்காட்சி வலையமைப்பான சனல் 4 இன் புதிய 'டிஸ்பேச்சஸ்' ஆவணப்படத்தில் தமக்கு எதிராக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகளை முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மறுப்பு தெரிவித்துள்ளார்.**



இந்த வீடியோ 2005 ஆம் ஆண்டிலிருந்து ராஜபக்ஷவுக்கு எதிரான காழ்ப்புணர்ச்சி என்றும் அதே சேனலில் ஒளி பரப்பப்பட்ட காணொளிகளை போலவே கட்டுக்கதை என முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அறிக்கை ஒன்றினை வெளியிட்டு தெரிவித்துள்ளார்.

2019 ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷவை வெற்றிபெறச் செய்யும் முயற்சியில் நாட்டில் பாதுகாப்பின்மையை உருவாக்கும் வகையில் தாக்குதல் திட்டமிடப்பட்டதாகவும், இதற்கு அரச அதிகாரிகள் உடந்தையாக இருந்தனர் என்றும் சனல் 4 நிறுவனம் அம்பலப்படுத்தியது.

இந்நிலையில் 2019 ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறுவதற்கு இஸ்லாமிய தீவிரவாதிகள் குழு தற்கொலைத் தாக்குதல்களை நடத்தியதாக கூறுவது அபத்தமானது என்றும் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபயராஜபக்ஷ மறுப்பு தெரிவித்துள்ளார். (நி)

# சனல் 4 இற்கு எதிராக ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

பிரித்தானியாவின் சனல் 4 அலைவரிசையில் ராஜபக்ஷக்கள் மற்றும் சில பாதுகாப்புத் தலைவர்களின் தொடர்பு இருப்பதாகக் குற்றம் சாட்டி காணொளியை ஒளி பரப்பியதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயத்திற்கு முன்பாக நேற்று வியாழக்கிழமை தேசத்தைக் கட்டியெழுப்பும் மற்றும் நல்லிணக்கத்திற்கான இயக்கம் ஆர்ப்பாட்டம் நடத்தியது. மேலும் பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயத்திடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டுள்ளது. (நி)



# திரிபோஷாவிற்கு பாரிய தட்டுப்பாடு

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் திரிபோஷாவிற்கு பாரிய தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் சிறு குழந்தைகளின் போஷாக்கு தொடர்பில் பாரிய பிரச்சினை எழுந்துள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

திரிபோஷா தொழிற்சாலையை தனியார் மயமாக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாக தகவல் வெளியாகியுள்ள நிலையில், அதனை உடனடியாக நிறுத்துமாறும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

மேலும், திரிபோஷா தொழிற்சாலையையும் தனியார் மயமாக்கும் முயற்சியில் இந்த அரசு ஈடுபட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

அந்த நிறுவனம் தனியார் மயமாக்கப்படும் நிறுவனங்களின் பட்டியலில் உள்ளது. அந்த நிறுவனத்தை தனியார் மயமாக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரிபோஷா கொடுப்பது எந்த அரசாங்கத்தின் பொறுப்பு. குழந்தைகளின் தாய்மார்களின் ஊட்டச்சத்தில் அக்கறை செலுத்துவது அரசின் பொறுப்பு என அவர் தெரிவித்தார். (நி)

# மதுக் கடைகளுக்கு அனுமதி மருந்தகங்களுக்கு இல்லை

## வினோ எம்.பி குற்றச்சாட்டு

(கொழும்பு)

**வன்னி மாவட்டத்தில் மருந்தகங்களை அமைப்பதற்கு அனுமதி வழங்காத அரசு, மதுபானசாலைகளை அமைப்பதற்கு அனுமதி வழங்கியுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம் இன்றைய பாராளுமன்ற அமர்வின் போது தெரிவித்துள்ளார்.**

**இன்று நாட்டில் மக்கள் மிகவும் பின்தங்கிய நிலையிலும் வறுமை நிலையிலும் இருக்கின்ற போது எதற்காக மதுபான சாலைகளுக்கு அனுமதி வழங்கப்படுகின்றது என்று கேள்வி எழுப்பியுள்ளார்.**

எதிர்க்கட்சியினர் குற்றம் சாட்டியது போல, ஆளும் கட்சியினர் இந்த அரசாங்கம் நிலைத்து இருக்கவும் அல்லது ஆளும் கட்சி பிரமுகர்கள், முக்கிய பாராளுமன்ற உறுப்பினர்களை தமக்கு ஆதரவாக நிலைத்து இருக்க செய்யவும் அரசாங்கம் தமது சகாக்களுக்கு மதுபான சாலைகளுக்கான அனுமதிபத்திரங்களை வழங்கி நாட்டை புதைகுழிக்குள் தள்ளுவதாகவும் தெரிவித்தார்.

கடந்த போராட்டங்களின் போது பாதிக்கப்பட்ட அமைச்சர்களுக்கும் , ஆளும் கட்சியினருக்கும் சலுகைகளாக மதுபானசாலை



அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படுவதாகவும் தெரிவித்துள்ள அவர், மக்களை பற்றி சிந்திக்காமல் இந்த நிலைமையில் தொடர்ந்தும் இருந்தால் இந்த அரசாங்கத்தை மக்களுக்காக குரல் கொடுக்கும் அரசாங்கமாக ஏற்று கொள்ள முடியாது என்றும் சுட்டிக்காட்டியுள்ளார். (நி)

# தற்கொலை செய்யும் அளவிற்கு முஸ்லிம்கள் முட்டாள்கள் அல்ல

## சரத் வீரசேகர

(கொழும்பு)

சிங்கள தலைவர் ஒருவரைத் தெரிவு செய்வதற்கு தற்கொலை செய்யும் அளவிற்கு முஸ்லிம்கள் முட்டாள்கள் அல்ல என பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர குறிப்பிட்டுள்ளார்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பாக சனல் 4 வெளியிட்டுள்ள காணொளி தொடர்பாக பாராளுமன்றில் பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

இதன்போது கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

"சிங்களத் தலைவர் ஒருவரை நியமிப்பதற்கு முஸ்லிம் பயங்கரவாதிகள் 9 பேரும் கர்ப்பிணித்தாய் ஒருவரும் தற்கொலை செய்து கொண்டனர் என்பதை ஏற்றுக்கொள்ளும் அளவிற்கு முட்டாள்களா நம் நாட்டில் இருக்கின்றார்கள் என்று தான் என்னால் கேட்க முடியும்.

இந்த தாக்குதலுக்கு நல்லாட்சி பொறுப்பு கூற வேண்டும் என்ற உறுதியில் தான் அன்றும் இன்றும் இருக்கின்றோம்.

இந்த தாக்குதலுக்கான பிரதான சூத்திரதாரி நௌபர் மௌலவி சிறையில் சிரித்துக்கொண்டு இருப்பார்" என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# 14 - ஆம் ஆண்டு நினைவலைகள்

## அமரர் சண்முகநாதன் சந்துதன்



அன்னை மடியில்
07.02.2000

ஆண்டவன் அடியில்
08.09.2009



அன்பின் திருவுருவே சந்து அண்ணா
நீங்கள் இவ் உலகை விட்டு பிரிந்து
பதின்நான்கு ஆண்டுகள் ஆனதுவோ!
என்றும் உங்கள் அழகிய திருமுகம்
எம் மனதைவிட்டு நீங்காது அண்ணா!
உங்களுடன் சேர்ந்து நாம் வாழவில்லை எனினும்
உங்கள் எண்ணங்களை செயல்களை கதைகளை
அம்மா கூறி எங்கள் மனதிலே சிந்தனையிலே
உங்கள் நிவ்னவை ஆழமாக பதித்துவிட்டார்
நீங்கள் வாழ்ந்த இடம், பாவித்த பொருட்கள்
துயிலுகின்ற இல்லம் எல்லாமே எமது பொக்கிஷங்கள்
உங்கள் மீது கொண்ட அன்பினால், ஆசையினால் தானோ
அப்பாவும் அம்மாவும் உங்கள் அடிவந்து சேர்ந்தனரோ!
உங்கள் மூவரையும் ஒருவர் பின் ஒருவராக இழந்து
நாம் தீராத வேதனையுடன் தவிக்கின்றோம்
நீங்கள் அமைதியாக துயிலும் இடம் நாடி
நாமும் நம் உறவுகளும் நீங்கள் பிறந்த நாளிலும்
இறந்த நாளிலும் உங்கள் மூவரையும் காண
வருகின்றோம். நீங்கள் துயில் கொள்ளும் காட்சி
கண்டு எம்மிடம் மீண்டும் வரமாட்டீர்களா என
கலங்கி தேடுகின்றோம்! எப்போ வருவீர்கள் என...





உங்கள் ஆத்மா சாந்திபெற இறைவனை வேண்டும்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

"சண்முகநாதம்"
4ம் கட்டை, கட்டப்பாலி வீதி,
ஆனைக்கோட்டை.

சகோதரர்கள்
தேவசந்துதன், தேவசாத்வீகன்
மற்றும் உறவுகள்

(C-7211) (16985)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலை அனுமதிக்கான விண்ணப்பம் கோரல் 14 ஆம் திகதி ஆரம்பம்-பேராசிரியர் சம்பத்

(கொழும்பு)

கல்வி பொதுத்தராதர உயர் தரப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கான பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பம் கோரல் எதிர்வரும் 14 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதாக பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.



விண்ணப்பங்களை மின்னஞ்சல் ஊடாக அனுப்பிவைக்க முடியுமென பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர், சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிப்பதற்கான வழிகாட்டல் கையேடு ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ளது.

இந்த முறை தேசிய பல்கலைக் கழக கட்டமைப்பிற்குள் சுமார் 45,000 மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்படுவார்கள் என எதிர்பார்க்கப்படுவதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர், சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்தார். (நி)

# செக் குடியரசிலிருந்து நாட்டிற்கு கொண்டுவரப்பட்ட விலங்குகள்

(கொழும்பு)

செக் குடியரசுடனான விலங்குகள் பரிமாற்றத் திட்டத்தின் கீழ் 3 பறவைகள் மற்றும் 4 குரங்குகள் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

இதற்கமைய, செக் குடியரசிலிருந்து 3 "ஈமு"(Emu) பறவைகள், மற்றும் 4 Ring-tailed lemur அரச குரங்குகள் என்பன கொண்டு வரப்பட்டுள்ளன.

சுமார் 4 மாத வயதுடைய இந்த Emu பறவைகள் அவுஸ்திரேலியாவை தாயகமாக கொண்டவையாகும்.

அனைத்துண்ணி விலங்கான மடகஸ்காரை பூர்வீகமாகக் கொண்ட Ring-tailed lemur குரங்குகள் அழிவடையும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளன.

இரண்டு வயதுடைய 2 ஆண் குரங்குகளும் 11 வயதுடைய 2 பெண் குரங்குகளும் நாட்டிற்கு அனுப்பப்பட்டுள்ளன.

இந்த விலங்குகள் பின்னவலை வாகொல்ல மிருகக் காட்சி சாலையில் ஒரு மாதத்திற்கு தனிமைப்படுத்தப்படவுள்ளன.

அதன் பிறகு, இந்த விலங்குகள் அதே மிருகக்காட்சி சாலையில் காட்சிக்கு வைக்கப்படவுள்ளன. (நி)

# வங்கிகளில் தொடர்ந்து அதிகரிக்கும் டொலரின் பெறுமதி

(கொழும்பு)

இலங்கையில் உள்ள வர்த்தக வங்கிகளில் அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி மேலும் வீழ்ச்சியடைந்துள்ளது.

அதன்படி மக்கள் வங்கியில், அமெரிக்க டொலரின் கொள்முதல் பெறுமதி 313.85 ரூபாயிலிருந்து 314.34 ரூபாய் ஆகவும் விற்பனை பெறுமதி 328.60 ரூபாயிலிருந்து 329.11 ரூபாய் ஆக அதிகரித்துள்ளது. (நி)

கரவெட்டி, பருத்தித்துறை பிரதேச செயலகங்கள் இணைந்து நடத்தும் பாரம்பரிய உணவுக் கண்காட்சியும் விற்பனையும் நேற்றுக் மாலை சந்தை மைக்கல் மைதானத்தில் இடம் பெற்றது.

(படம்:-மகாலிங்கம்)






## நல்லோரைக் காக்க ஓடோடி வா, நல்லைக் குமரா!

சுட்ட பழும் கொடுத்து
ஔவைக் கிழவியின்
ஆணவத்தை அடக்கிய குமரா!
சூர பத்ம அரக்கனை வதம் செய்து-அவனது
சேவலையும் மயிலையும் உனதாக்கி-அவனை
இரட்சித்த பெருந்தகையே!!
சிவசக்தியின் இளைய திலகமே!!!
நவீன அரக்கர்களை அடியோடு அழித்து
நல்லோரைக் காக்க-உடன்
இப் பிரபஞ்சத்துக்கு ஓடோடி வா

வ.ஜெயராஜா,
தென்கருணை,
கரவெட்டி.

## கலியுக வரதன் அருட்கோலம்

பக்தர்க்கு ஞானம் அருளும் குருநாதன்
பகைவரையும் ஆட்கொண்ட பெருமகன்
தொண்டர்தம் பெருமை உணர்த்திய சிவமைந்தன்
நல்லைத் திருவீதியில் தொண்டர் புடைசூழ
கலியுகவரதனாக அழகுக்கோலம் காட்டுகின்றான்
இதனைக் கண்டால் கலியுக அசுரரும்
மனம் திருந்தி வாழ்வர் இது திண்ணம்!

சண்முகலிங்கம் சஜீலன்,
பன்னாலை.

# இராசிபலன்

08.09.2023
ஆவணி 22, வெள்ளிக்கிழமை
நவமி முன்னிரவு 09.40 மணிவரை

மிருகசீரிடம் பிற்பகல் 05.01 மணிவரை
சுபநேரம் -06.04-07.34 மணிவரை
இராகுகாலம்-10.34-12.04 மணிவரை

சந்திராஷ்டமம்-
விசாகம், அனுசம்

வளவன்

**மேஷம்** நீண்ட நாளைய பிணக்குகளில் திசைதிருப்பங்கள் ஏற்படலாம், செலவுகளில் சிக்கனம் காட்டி சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், காரிய அனுகூலமுண்டு.

**கடகம்** எதிர்பாராத திருப்பங்கள் ஏற்படும் நாள், குடும்பத்தினரை அனுசரித்துச் செல்வீர் கள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், சுப விரயங்கள் கூடும்.

**துலாம்** தொழில் வளர்ச்சிக்கு குறுக்கீடாக இருந்தவர்கள் விலகுவர், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், ஆலய வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.

**மகரம்** உற்சாகத்தோடு பணிபுரியும் நாள், மறைமுக எதிர்ப்புக்கள் மாறும், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், பாக்கிகள் வசூலாகும் வாய்ப்புண்டு.

**ரிஷபம்** பொதுவாழ்வில் புகழ் கூடும், அலங்காரப் பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், உறவினர் கள் மத்தியில் மதிப்பும் மரியா தையும் உயரும் நாள்.

**சிம்மம்** குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.

**விருச்சிகம்** வரவைக்காட்டிலும் செலவுகள் அதிகரிக்கலாம், மனதில் இனம் புரியாத கவலைகள் தோன்றி மறையும், எடுத்த காரியங்களில் நிதானம் தேவை.

**கும்பம்** சுப செய்திகள் வந்து சேரலாம், வளர்ச்சிப் பாதையை நோக்கி அடி எடுத்து வைப்பீர் கள், உறவினர் வழியில் ஒத்துழைப்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**மிதுனம்** இறைவழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், குடும்பச் செலவுகளில் சிக்கனம் காட்ட முற்படுவீர்கள், மன ஆறுதல் தரும் வகையில் பயணமொன்று ஏற்படலாம்.

**கன்னி** அன்பு நண்பர்கள் ஆர்வத்தோடு உதவ முன்வருவர், செய் தொழில் மேன்மையுண்டு, எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

**தனுசு** குடும்ப நலன் கருதி எடுத்த முயற்சிகள் வெற்றி பெறும், இனிமையான அனுபவங்கள் ஏற்படும் நாள், அரச வழயில் அனுகூலமுண்டு.

**மீனம்** எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு.

காலம் புத்தியுள்ள அறிவுரையாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைத்தியர்களே! உங்கள் பிள்ளைகளுக்கு நடந்தால் மூடி மறைப்பீர்களா?

**சிறுமியின் கை அகற்றப்பட்ட சம்பவத்திற்கு நீதி கோரி கவனயீர்ப்பு போராட்டம்**

(யாழ்ப்பாணம்)

**யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் காய்ச்சலுக்காகச் சேர்க்கப்பட்ட 8 வயதுச் சிறுமியின் கை ஒன்று அகற்றப்பட்ட சம்பவத்திற்கு நீதி வேண்டி போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.**





யாழ்.போதனா வைத்திய சாலைக்கு முன்பாக குறித்த போராட்டம் நேற்று இடம்பெற் றது.

இதன்போது போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் சம்பந்தப்பட்ட தாதியை பணி நீக்கம் செய், பணிப்பாளரே விசாரணை களை மூடி மறைக்காதே, வைத் தியர்களே உங்கள் பிள்ளை களுக்கு நடந்தால் மூடிமறைப் பீர்களா? உள்ளிட்ட கோஷங்கள் இதன்போது எழுப்பப்பட்டது.

மேலும் ஜனாதிபதி ரணில் விக் கிரமசிங்கவுக்கு மகஜரொன்றை கையளிப்பதற்கு பொதுமக்களிட மும் கையெழுத்து சேகரிப்பு முன் னெடுக்கப்பட்டது. (நி-6-33-104)



வடமராட்சி தெற்கு-மேற்கு கரவெட்டி பிரதேச சபையின் கோவிற்சந்தை புனரமைப்புக்கான அடிக்கல் நாட்டு விழாவை நேற்று முன்தினம் வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் ஆரம்பித்து வைத்தார். (படம்:-மகாலிங்கம்)

# 'நல்லூர் உற்சவகால' தெய்வீக இசை அரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். இளங்கலைஞர் மன்றத்தால் நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு நடத் தப்படும் தெய்வீக இசை அரங்கு நிகழ்வு நாளை 9 ஆம் திகதி மாலை 6.45 மணிக்கு நல்லூர் துர்க்காதேவி மணிமண்ட பத்தில் இடம்பெற உள்ளது.

இதில் யாழ்.இராமநாதன் அரங்காற்றுகை கட்புலக் கலை கள் பீடத்தினால் குழு இசை நடத்தப்படவுள்ளது. இதன் போது வயலின் கே.வேலதீபன், மிருதங்கம்-மு.சுலக்சன், கஞ் சிரா-பு.வேணுகாந்தன் ஆகி யோர் நிகழ்த்தவுள்ளனர்.

தொடர்ந்து 7.15 மணிக்கு இடம்பெறவுள்ள இசையரங்கு நிகழ்வில் பாட்டு-சுகன்யா அர விந்தன், வயலின்-அ.ஜெய ராமன், மிருதங்கம்-ஞா.வசந், கஞ்சிரா-ம.லோகேந்திரன் ஆகி யோர் நிகழ்த்தவுள்ளனர். (நி)

# குளியலறை பொருட்களை திருடிய நபரொருவர் கைது

(யாழ்ப்பாணம்)

புனரமைப்பு வேலைகள் நடைபெற்று வரும் வீட்டில் இருந்து 6 இலட்ச ரூபாய் பெறுமதியான பொருட்களை திருடிய குற்றச்சாட்டில் ஒரு வரை நேற்று முன்தினம் பொலிஸார் கைது செய்துள் ளனர்.

யாழ்ப்பாணம் நகர் பகுதி யில் உள்ள வீடொன்று புனர மைக்கப்பட்டு வருகின்றது. அந் நிலையில் வீட்டில் புதி தாக பொருத்துவதற்காக வாங்கி வைக்கப்பட்டு இருந்த குளியலறை பொருட்கள் உள்ளிட்ட சுமார் 6 இலட்ச ரூபாய் பெறுமதியான பொரு ட்கள் களவாடப்பட்டு இருந் தன.

சம்பவம் தொடர்பில் உரி மையாளரால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து விசாரணைகளை முன்னெ டுத்த பொலிஸார் சந்தேக நபரை கைது செய்துள்ள னர்.

கைது செய்யப்பட்ட நபரி டம் முன்னெடுக்கப்பட்ட விசா ரணைகளின் அடிப்படையில் அவரால் திருடப்பட்ட குளிய லறை பொருட்கள் உள்ளிட் டவை மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்த னர். (நி-6-33)

## விநாயகர் சதுர்த்தி

(யாழ்ப்பாணம்)

யாழ். வண் வடகிழக்கு கலட்டி வீரகத்திப் பிள்ளையார் தேவஸ்தா னத்தில் விநாயகர் சதுர்த்தி உற்சவம் எதிர்வரும் 18 ஆம் திகதி திங்கட்கிழமை இடம்பெற வுள்ளது.

மாலை 4 மணிக்கு ஸ்நபன அபிஷேகம், மூலமூர்த்தி பூஜை, வசந்த மண்டப பூஜை என்பன இடம்பெற்று விநாயப் பெருமான் உள்வீதி, வெளிவீதி வலம் வரும் காட்சி இடம்பெறும் என ஆலய பிரதம குரு சிவஸ்ரீ ச.விவே கானந்தக் குருக்கள் அறிவித்துள் ளார். (நி-6)



கின்னஸ் உலக சாதனை படைக்கும் முயற்சியாக 14 நாட்கள் இரவு-பகல் ஓய்வின்றி தொடர்ச்சியாக இடம்பெறும் வகையில் திட்டமிடப்பட்டுள்ள சாதனை நடைபயணத்தை இலங்கை இராணுவ வீரர் ஒருவர் பருத்தித்துறை - சக்கோட்டையில் இருந்து நேற்று முன்தினம் ஆரம்பித்துள்ளார். (படம்:-சிவசாந்தன்)

# வழிப்பறி திருட்டில் ஈடுபட்டவர் கைது

(யாழ்ப்பாணம்)

சமூர்த்தி உத்தியோகஸ் தர் என தன்னை அறிமுகப் படுத்திக்கொண்டு, வழிப்பறி யில் ஈடுபட்டு வந்த நபர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பிரதேசங்களில், ஆள் நட மாட்டம் குறைவான இடத் தில் பயணிக்கும் முதியவர் களை மறித்து, தன்னை சமூர்த்தி உத்தியோகஸ் தராக அறிமுகப்படுத்திக் கொண்டு, உதவி திட்டங்கள் வழங்க உள்ளதாக கூறி நகைகள் உள்ளிட்ட உடமை களை வழிப்பறி கொள்ளை யடித்து தப்பி சென்றுள்ளார்.

இவ்வாறாக நான்கு சம்ப வங்கள் பதிவாகி இருந்த நிலையில் பொலிஸார் விசா ரணைகளை முன்னெடுத்து, குறித்த சந்தேகநபரை கைது செய்துள்ளனர்.

அந் நபரிடமிருந்து வழிப் பறி கொள்ளையடிக்கப்பட்ட 10 பவுண் நகைகளை பொலி ஸார் மீட்டுள்ளனர்.

சந்தேக நபரை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடு த்துள்ளனர். (நி-6-33)

## க.பொ.த உ/த பரீட்சை பெறுபேறுகள்-2022 (2023)

### யா/ஹாட்லி கல்லூரி

**உயிரியல் விஞ்ஞானம்**

கே.டிறோயன்-3 A, ரி.தேவசுதன்-3A, கே.பிர தீபன்-3A, எம்.சாரங்கன்-2AB, ரி.சந்தோஷ்-2 AB,

**பௌதிக விஞ்ஞானம்**

ரி.நிதுசியன் 3A, என்.சசிகாந்-3A, எஸ்.தாரு சன் 3A, ரி.விருசன் 3A, கே.கதுர்சன் 3A, என் உமணன் 3A, எஸ்.சிவானுஜன் 3A, எஸ்.சஞ்ச யன் 3A, கே.சத்தியன் 3A, என்.அனோஜன் 3A, ரி.திவிசன்-3A, பி.பானுஜன் 3A, ஆர்.திலக்ஷ்-2AB, எஸ்.அனுசன் 2 AB,

**வர்த்தகப்பிரிவு**

எஸ்.அபிலாஷா-3A,

**கலைப்பிரிவு**

எம்.சாருஜன் 2 AB, கே.சுஜீபன் 2 AB,

**பொறியியல்**

ஏ. திலான் பிரபாகர் 2AB.

**வர்த்தகப்பிரிவு**

ஸ்ரீ.தருணிகா-2AB, கி.தர்சிகா 2 AB,

**கலைப்பிரிவு**

சி.கஜலக்சன் 3A, லை.அபிநயா 3A, த.கேமலா 2AB, ந. கோபிகா 2AB, சி. சதுஜன் 2 AB, சி. கிசாஜினி 2 AB.

### தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி

**உயிரியல் விஞ்ஞானம்**

சி.சிவேதன் 3A,

### நெல்லியடி மத்திய கல்லூரி

**உயிரியல் விஞ்ஞானம்**

சி. கஜன் 2AB,

**கணிதப்பிரிவு**

சா.வாகீசன் 3A, கி. அனுசன் 3A, பா.மனோஜ் 2 AB, அ. கோகுலன் 2AB,

**வர்த்தகப்பிரிவு**

ம.மேனகா 3A, சு.சாரங்கி-3A, சு.சந்திர குமார்-3A, இ.சிமாம்சிகா-3A, க.புனிதா 3A,

**கலைப்பிரிவு**

கு.விந்துசா 2AB,

### தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்

**கலைப்பிரிவு**

ம.ஜங்கரன்-2AB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஸ்வெசும கொடுப்பனவின் இரண்டாம் கட்டம் இன்று

(கொழும்பு)

2 இலட்சத்து 57 ஆயிரத்து 170 அஸ்வெசும பயனாளிகளுக்காக கொடுப்பனவு வழங்கும் நிகழ்வின் ஜூலை மாதத்திற்கான இரண்டாம் கட்ட பணிகள் இன்று ஆரம்பிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அஸ்வெசும பயனாளிகளுக்கான பணம் இன்று வங்கிகளில் வைப்பு செய்யப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார். இதன்படி, ஆயிரத்து 550 மில்லியன் ரூபாய் இரண்டாம் கட்டமாக வழங்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

# பாடசாலை மாணவர்களிடையே அதிகரிக்கும் டெங்கு நோய்

(கொழும்பு)

தற்போது பெய்து வரும் கடும் மழை காரணமாக நாடளாவிய ரீதியில் மீண்டும் டெங்கு நோய் பரவக்கூடும் என தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு எச்சரித்துள்ளது.

இந்த வருடத்தில் மேல் மாகாணத்தில் மாத்திரம் 30,300 இற்கும் அதிகமான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் நளின் ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

இதுவரை பதிவாகியுள்ள மொத்த நோயாளர்களின் எண்ணிக்கையில் சுமார் 20 வீதமானவர்கள் பாடசாலை மாணவர்கள் எனவும் தற்போது பாடசாலை செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமையினால் அவர்கள் இது தொடர்பில் அக்கறை கொள்ள வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

# நாட்டில் குறைவடைந்த மதுபாவனை ஆய்வில் வெளியான தகவல்

(கொழும்பு)

நாட்டில் பெரும்பான்மை மக்கள் கடந்த 12 மாதங்களில் எந்த வகையான மதுபானத்தினையும் பயன்படுத்தவில்லை.

இலங்கை முழுவதும் 70.9 வீதமான மக்கள் இவ்வாறு எந்த வகையான மதுபானத்தினையும் அருந்தவில்லை என மது மற்றும் போதைப்பொருள் தகவல் மையம் நடத்திய ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

கடந்த 12 மாதங்களில் 29.1 வீதமான மக்களே மதுபானம் அருந்தியுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த தொகையில் 43.3 வீதமானவர்கள் ஆண்கள் எனவும் 2.8 வீதமானவர்கள் பெண்கள் எனவும் மது மற்றும் போதைப்பொருள் தகவல் மையம் தெரிவித்துள்ளது.

மேலும் பொருளாதார நெருக்கடி மற்றும் மதுபானங்களின் விலை அதிகரிப்பு காரணமாகவே மதுபானம் அருந்துவோரின் தொகை குறைவடைந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி, நாடளாவிய ரீதியில் 72 வீதமானவர்கள் மதுபானத்தின் விலையினை அதிகரிக்கும் நடவடிக்கைகளுக்கு ஆதரவாக செயற்படுகின்றனர் என மது மற்றும் போதைப்பொருள் தகவல் மையம் சுட்டிக்காட்டியுள்ளது. (நி)


# மணிவிழாவும் சேவைநலன் பாராட்டும்



திருமதி. சிவஞானசோதி தேவராசா

(பயிற்றப்பட்ட விஞ்ஞானம், கலைமாணி, பட்டப்பின்கல்வி டிப்ளோமா)

(17.08.1988 - 07.09.2023)

எழுகதிராய் அவனியில் தோன்றி முப்பத்தைந்து வருடங்கள் விஞ்ஞான ஆசிரியராகக் கடமையாற்றி எங்கள் இதயங்களில் இனிதே பதிவான மணிவிழாக் காணும் நாயகியே மாண்புறு நாளில் மனதார வாழ்த்துவதோடு எதிர்காலம் சிறப்பாக அமைய வேம்படி விநாயகனைப் பிரார்த்திக்கின்றோம்

Best Wishes

சேவை விபரம்:

17.08.1988-04.02.1991 - யா/தனங்கிளப்பு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை

05.02.1991-31.12.1992 - யா/பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை

01.01.1993-02.01.2005 - யா/அல்லாரை அரசினர் தமிழ் வித்தியாலயம்

03.01.2005-01.02.2015 - யா/சாவகச்சேரி மகளிர் கல்னரி

02.02.2015-12.01.2016 யா/நாவற்குழி மகாவித்தியாலயம்

13.01.2016-07.09.2023 - யா/ மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி

(16967)

சேவையாளர் சங்கம் யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி


# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 150 | 180 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 |
| பச்சைமிளகாய் | 300 | 300 |
| தக்காளி | 160 | 130 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 200 |
| கோவா | 160 | 130 |
| கரட் | 350 | 300 |
| பூசணி | 60 | 80 |
| புடோல் | 80 | 80 |
| வாழைக்காய் | 200 | 240 |
| சின்ன வெங்காயம் | 220 | 250 |
| பெரிய வெங்காயம் | 200 | 220 |
| பாகற்காய் | 400 | 300 |
| வெண்டக்காய் | 80 | 80 |
| கருணைக் கிழங்கு | 160 | 160 |
| பயற்றங்காய் | 150 | 130 |
| லீக்ஸ் | 160 | 180 |
| பீற்றூட் | 120 | 100 |
| கறிமிளகாய் | 300 | 300 |
| முருங்கைக்காய் | 100 | 80 |
| போஞ்சி | 450 | 300 |
| கத்தரிதம்புள்ள | 120 | 100 |
| கீரை - 1 பிடி | 80 | 100 |
| தேசிக்காய் | 700 | 650 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 |
| இராசவள்ளி | 350 | 350 |
| வெங்காயப்பூ | 250 | 250 |
| முள்ளங்கி | 60 | 80 |
| பொன்னாங்காணி | 80 | 70 |
| வல்லாரை | 40 | 30 |
| ஈரப்பலா | 100 | 60 |


# மணிவிழா வாழ்த்தும் சேவை நலன் பாராட்டும்



திருமதி. அருள்பாமா குகதாஸ்

பயிற்றப்பட்ட கணித ஆசிரியர் (SLTS-1)

சேவை முன் பயிற்சி 1988.08.17–1988.10.20

யா/வல்லை மகளிர் மகாவித்தியாலயம்

1988.10.20–1991.12.31

யா/ பலாலி ஆசிரியர் கலாசாலை

1992.01.01–1993.12.31

யா/மாமுனை அ.த.க பாடசாலை

1994.01.01–1998.01.04

யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி

1998.01.05–2010.05.10

யா/வல்வெட்டி இ.த.க பாடசாலை

2010.05.11–2018.04.22

யா/உடுப்பிட்டி அ.மி கல்லூரி

2018.04.23–2023.09.09



திரு. நாகலிங்கம் கிருஸ்ணபிள்ளை

ஆய்வுகூட பணியாளர்

சேவை விபரம்

யா/மணற்காடு றோ.க.த.க பாடசாலை

1992–1994

யா/அம்பன் அ.மி.த.க பாடசாலை

1995–1997

யா/மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்

1998–2008

யா/கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி

2009–2015

யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி

2016–2023

Best Wishes

வாழ்த்துவோர்: பணியாளர் நலன்புரிச் சங்கம், யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரஷ்யாவுடன் ஆயுத ஒப்பந்தத்தில் ஈடுபட்டால் அதற்கான விலையை வடகொரியா செலுத்த வேண்டியிருக்கும்

## வடகொரியாவை எச்சரித்த அமெரிக்கா



(வோஷிங்டன்)

ரஷ்யாவுடன் ஆயுத ஒப்பந்தங்களை செய்து கொண்டால் அதற்கான விலையை வடகொரியா செலுத்த வேண்டியிருக்கும் என அமெரிக்கா எச்சரித்துள்ளது.

ஆயுதவிற்பனை தொடர்பில் இருநாடுகளுக்கும் இடையில் இடம்பெறும் பேச்சுவார்த்தைகள் முன்னேற்றமடைந்துள்ளன என தெரிவித்துள்ள அமெரிக்கா இந்த எச்சரிக்கையையும் விடுத்துள்ளது.

உக்ரைனிற்கு எதிராக பயன்படுத்துவதற்கு ரஷ்யாவிற்கு வடகொரியா ஆயுதங்களை வழங்கினால் அது வடகொரியாவிற்கு உகந்த விடயமாக அமையப்போவதில்லை அதற்கு வடகொரியா ஒரு விலையை செலுத்த வேண்டியிருக்கும் என வெள்ளை மாளிகையின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜக்சுலிவன் தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவிற்கு ஆயுதங்களை வழங்கப்போவதில்லை என்ற உறுதிமொழியை கடைப்பிடிக்கவேண்டும் என தனிப்பட்ட ரீதியிலும் பகிரங்கமாகவும் நாங்கள் வடகொரியாவை கேட்டுக்கொண்டுள்ளோம் எங்கள் சகாக்களும் இதனை தெரிவிக்கவேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் ரஷ்ய ஜனாதிபதியை சந்திப்பதற்காக மொஸ்கோ செல்லவுள்ளார் என தகவல்கள்வெளியாகி உள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# இந்தியாவிற்கு 'பாரத்' என்ற நாமம் சாத்தியமானதா?

(ஜெனீவா)

இந்தியா என்ற நாட்டின் பெயரை "பாரத்" என மாற்ற இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

இதை உறுதி செய்யும் வகையில் பிரதமர் மோடி பங்கேற்கும் நிகழ்ச்சி நிரல் அழைப்பிதழில் இந்தியா என்பதற்கு பதிலாக "பாரத்" என அச்சிடப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சிகள் மிகப் பெரிய அளவில் இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. என்றாலும் உலகளவில் "இந்தியா" என்பது "பாரத்" என மாற்றப்பட்டால் ஏற்படும் விளைவுகள் குறித்து விவாதம் தொடங்கியுள்ளது.

கடவுச்சீட்டு, தூதரகம், மின்அஞ்சல் போன்றவற்றில் எவ்வாறு தாக்கத்தை ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.


இந்த நிலையில் இது குறித்து ஐ.நா. பொதுச்செயலாளர் அன்டோனியோ குட்டரெஸின் துணை செய்தி தொடர்பாளர் பர்ஹான் ஹக் கூறுகையில் துருக்கி துருகியே என கடந்த வருடம் மாற்றப்பட்டது.

இதற்கு அந்த அரசிடம் இருந்து முறையாக கோரிக்கை எங்களுக்கு வந்தது. அதனடிப்படையில் தான் மாற்றப்பட்டது.


அதேபோல் எங்களுக்கு கோரிக்கை வந்தால் நாங்கள் அவர்களிடம் இருந்து கோரிக்கை வந்ததாக கருதுவோம் அதன்படி இந்திய அரசு சார்பில் முறைப்படியான கோரிக்கை விடுக்கப்பட்டால் ஐ.நா.வில் இந்தியா என்பதற்கு பதில் "பாரத்" என அழைக்கப்படும். என அவர் தெரிவித்தார். (நி)





சாருஜா




சரவணன்




மாதங்கி




கஜிதன்




சியான்




விநோஜ்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யுத்த காலத்தில் இடம்பெற்ற

# மனித உரிமை மீறல்கள் குறித்து சர்வதேச விசாரணை அவசியம்

## அனைவரும் ஒன்றிணைந்து வலியுறுத்துமாறு கோரிக்கை

(கொழும்பு)

**இலங்கையில் யுத்தகாலத்தில் இடம்பெற்ற பாரிய மனித உரிமை மீறல்கள் குறித்து சர்வதேச விசாரணைகள் அவசியம் என்ற வேண்டுகோள்கள் விடுக்கப்படுவது அவசியம் என மனித உரிமை செயற்பாட்டாளர் ருக்கி பெர்ணாண்டோ தெரிவித்துள்ளார்.**

தனது டுவிட்டர் பதிவில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

சனல் 4 இன் சமீபத்தைய ஆவணப்படம் உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னணியில் உள்ள சதித்திட்டம் குறித்து பல விடயங்களை அம்பலப்படுத்துவதுடன் பத்திரிகையாளர்கள் கொலை யுத்தகால குற்றங்கள் குறித்தும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த விடயம் தொடர்பில் அரசியல்வாதிகள் இராணுவத்தின் தொடர்புகள் குறிப்பாக இனவெறி ஊழல் ஏதேச்சதிகார ராஜபக்ஷ குடும்பம் மற்றும் அவர்களின் சகாக்களான துணை இராணுவத்தினர் குறித்ததகவல்கள்வெளியாகியுள்ளன.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் குறித்து சர்வதேச விசாரணைகள் இடம்பெறவேண்டும் என கிறிஸ்தவ தலைவர்களும் ஏனையவர்களும்விடுத்த வேண்டுகோளை புதிய ஆவணதிரைப்படம் மீண்டும் வலியுறுத்துகின்றது.

இலங்கையில் இடம்பெற்ற யுத்தகாலஅநீதிகள் ஏனைய பாரதூரமான குற்றங்கள் மனித உரிமைமீறல்கள் குறித்தும் இதேபோன்ற சர்வதேச விசாரணைக்கான வேண்டுகோள்கள் விடுக்கப்படவேண்டும்.

அவ்வாறான வேண்டுகோள்களை விடுக்காமல் இருப்பது கபட நாடகமாகும்.

மேலும் இலங்கை குறித்து கடந்தகாலங்களில் சனல் 4 வெளியிட்ட முன்னைய ஆவணப்படங்கள் குறித்தும் கவனம் செலுத்தப்படவேண்டும். கலும்மக்ரேயின் இந்த ஆவணப் படங்கள் தமிழர்களுக்கு எதிரான ராஜபக்ஷாக்களின் குற்றங்களை காண்பித்திருந்தன. (நி)

## மீள் திருத்தத்திற்கு விண்ணப்பிக்கலாம்

(கொழும்பு)

2022 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை தொடர்பான மீள் திருத்த விண்ணப்பங்களை மேற்கொள்ள முடியும் என பரீட்சை திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி பரீட்சார்த்திகள் நேற்று முதல் ஆரம்பமான மீள் திருத்த விண்ணப்பங்களை எதிர்வரும் 16 ஆம் திகதி வரை விண்ணப்பிக்க முடியும் என பரீட்சை ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

பரீட்சை திணைக்களத்திற்கு சொந்தமான www.doenets.lk என்ற இணையத்தளத்திற்கு சென்று விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ள முடியும். (நி)

## ராஜபக்ஷ என்ற பெயரை இல்லாதொழிக்க ரணிலுக்கு நல்ல சந்தர்ப்பம் - ஹிருனிகா

(கொழும்பு)

ரணில், ராஜபக்ஷ என்ற பெயரை இல்லா தொழிப்பதற்கு இதுவே சிறந்த சந்தர்ப்பம் என முன்னாள் பாராளுமன்ற உறுப் பினர் ஹிருணிகா பிரேமச் சந்திர தெரிவித்துள்ளார். உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான தகவல்கள் உண்மைக்கு புறம்பானதாக இருக்க முடியாது எனவும் தெரிவித்துள்ளார்.

சனல் 4 போன்ற சர்வதேச ஊடகங்கள் புலனாய்வு ஊடக வியலை மேற்கொண்டு வருவதாலும், உண்மை மற்றும் பொய்யான விடயங்களை கண் டறிவதற்கு உதாரணங்களை தேடுவதாலும் இது உண்மைக்கு புறம்பானதாக இருக்க முடியாது என தெரிவித்துள்ளார். இவ்வாறான ஊடக நிறு வனங்கள் சொற்ப அளவிலே காணப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். சனல் 4 வெளியிட்ட ஆவ ணப்படத்தில் உள்ள தகவல் கள் ஏற்கனவே நிரூபணமான நிலையில் உண்மைகள் வெளி வரவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். மேலும் ரணில், ராஜபக்ஷ என்ற பெயரை இல்லா தொழிப் பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கி



ரமசிங்கவுக்கு இது நல்ல சந்தர்ப்பம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்தில் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளானவர்கள் மீது குற்றவியல் விசாரணை நடத்தப்பட வேண்டுமென முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர வலியுறுத்தியுள்ளார். (நி)


26 ஆவது பிறந்தநாள் நினைவலைகள்



பிறப்பு 08 - 09 - 1997

அழிப்பு 17 - 11 - 2020

யாழ்.பல்கலைக்கழ மருத்துவபீட மூன்றாம் வருட மாணவன் (40 ஆம் அணி)

அமரர்.சிதம்பரநாதன் இளங்குன்றன்

வைத்தியக் கனவுடன் மருத்துவபீடம் சென்ற
உன்னை வையத்தில் வாழ்ந்த கொடியோர்
மண்ணுலகை விட்டு விண்ணுலகம்
அனுப்பினர் - நீ மண்ணை விட்டு சென்றாலும்
விண்ணிலும் எம்முடன் இருப்பாய்!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!

(C-7209)

நிரந்தர முகவரி: நாகர்கோவில் தெற்கு, நாகர்கோவில்.
தற்காலிக முகவரி: மாதா கோவில் வீதி, துன்னாலை வடக்கு, கரவெட்டி
தகவல்: குடும்பத்தினர்


## 10 பல்கலைக்கழகங்களை உருவாக்க எதிர்பார்ப்பு

### ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்காலத்தில் குறைந்த பட்சம் 10 பல்கலைக்கழகங்க ளையாவது நாட்டில் உருவாக்க எதிர்பார்த்துள்ளதாகவும், மாண வர் கடன் திட்டங்களின் ஊடாக இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளில் உயர்கல் வியை பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புக்களைப் பெற்றுக்கொடுக்க எதிர்பார்த்திருப் பதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

21 ஆம் நூற்றாண்டுக்குப் பொருத்தமான புதிய கல்வி முறையை தயாரிப்பதற்கான பணிகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளதாக தெரிவித்த ஜனாதிபதி, இதற்காக வெளிநாடுகள், துறைசார் நிபுணர்கள், மாணவர் பாராளுமன்றம் ஆகியதரப் புக்களின் ஆலோசனைகளும் பெறப்படும் எனவும் தெரிவித்தார்.

மாணவர்கள் தமது எதிர் காலத்தை திட்டமிடுவதற்கு தேவையான பாடங்களை தெரிவு செய்வதற்கான சந்தர்ப்பம் அந்த பல்கலைக்கழகங்களின் ஊடாக வழங்கப்படுமெனவும், புதிய தொழில்நுட்ப கல்லூரிகளை நிறுவுதல் உட்பட கல்வித்து றையின் பல்வேறு சீர்த்திருத்தங்கள் தொடர்பிலும் ஆராயப்பட்டு வருவதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுமியின் கை அகற்றப்பட்ட விவகாரம்
# சம்பவத்துடன் தொடர்புடைய தாதிக்கு பயணத்தடை விதித்தது நீதிமன்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் 8 வயது சிறுமியின் இடது கை மணிக்கட்டுடன் அகற்றப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையதாக குற்றம்சாட்டப்படும் தாதியருக்கு யாழ்.நீதிவான் நீதிமன்று பயண தடை விதித்துள்ளது.

காய்ச்சல் காரணமாக யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட 8 வயது சிறுமியின் கையில் பொருத்தப்பட்ட "கானுலா" தவறாக பொருத்தப்பட்டதால், சிறுமி பாதிப்புக்கு உள்ளான நிலையில், சிறுமியின் இடது கை மணிக்கட்டுடன் , அகற்றப்பட்டது.

அது தொடர்பில் சுகாதார அமைச்சு, யாழ்.போதனா வைத்திய சாலை, வடமாகாண ஆளுநர் ஆகியோரால் நியமிக்கப்பட்ட விசாரணை குழுக்கள் விசாரணைகளை முன்னெடுத்துள்ள நிலையில், பெற்றோரினால் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தனர்.

முறைப்பாட்டின் பிரகாரம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து, சம்பவம் தொடர்பில் வாக்குமூலங்களை பதிவு செய்திருந்தனர்.

அதனை தொடர்ந்து நேற்று வியாழக்கிழமை யாழ். நீதிவான் நீதிமன்றில் வழக்கு தொடர்ந்த நிலையில், பெற்றோர் சார்பில் குறித்த தாதியார் வெளிநாடு தப்பி செல்லாதவாறு பயணத்தடை விதிக்க வேண்டும் என மன்றில் கோரிக்கை வைக்கப்பட்டது.

அதனை ஏற்றுக்கொண்ட மன்று தாதியருக்கு பயணத் தடை விதித்ததுடன், வழக்கினை எதிர்வரும் 18 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது. (நி-6-33)

## வவுனியா இரட்டைக் கொலைச் சம்பவம்
# ஒருவருக்கு கடூழிய சிறைத்தண்டனை மூவருக்கு பிடியாணை பிறப்பிப்பு

(குருமன்காடு)

வவுனியா, தோணிக்கல் பகுதியில் இடம்பெற்ற இரட்டை கொலை சம்பவம் தொடர்பில் தேடப்பட்டு வந்த சந்தேக நபர்கள் மூவருக்கு வவுனியா நீதிமன்றம் நேற்று பிடியாணை பிறப்பித்துள்ளது.

அத்துடன் ஏற்கனவே கைது செய்யப்பட்டுள்ள பிரதான சந்தேக நபருக்கு 4 மாத கடூழிய சிறைத் தண்டனையும் விதித்துள்ளது.

இரட்டை கொலை சம்பவத்துடன் தொடர்புபட்ட சந்தேகத்தில் ஆறு பேர் கைது செய்யப்பட்டிருந்ததுடன், அவர்களிடம் குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் கொலை விசாரணைப் பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்து வந்தனர்.

இதன்போது, மேலும் மூன்று சந்தேக நபர்களுக்கு எதிரான சாட்சியங்கள் உறுதிப்படுத்தப்பட்டமையினால் அவர்களை கைது செய்ய குற்றப் புலனாய்வு திணைக்களத்தினர் நடவடிக்கை எடுத்திருந்தனர். குறித்த மூவரும் தலைமறைவாகவுள்ளதால் அவர்களது கடவுச் சீட்டுகள் நீதிமன்றத்தால் முடக்கப்பட்டுள்ளதுடன், அவர்களை கைது செய்ய பகிரங்க பிடியாணை உத்தரவு வவுனியா நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், கைது செய்யப்பட்ட 6 சந்தேக நபர்களுக்கான அடையாள அணிவகுப்பு நேற்று திகதியிடப்பட்டிருந்தது.

எனினும் உரிய நபர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருவதானால் குறித்த வழக்கு அடையாள அணிவகுப்புக்காக எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு மீண்டும் திகதியிடப்பட்டது. (நி-6-250)

# காற்றாலை அமைக்க காணி சுவீகரிப்பு முயற்சி
## பேசாலை மக்களால் முறியடிப்பு



(மன்னார்)

காணி அமைச்சின் பணிப்புரைக்கு அமைவாக மன்னார் தீவில் பேசாலை பகுதியில் காற்றாலை அமைக்கும் திட்டத்திற்கு காணியை அடையாளப்படுத்தும் நோக்குடன் மன்னார் பிரதேச செயலகத்திலிருந்து அதிகாரிகள் அடையாள விளம்பரத்தை காட்சிப் படுத்திய போது காணி உரிமையாளர்கள மற்றும் பொது மக்கள் அவ்விடத்தில் எதிர்ப்பு தெரிவித்த சம்பவம் நேற்று முன்தினம் இடம் பெற்றது.

இச்சம்பவமானது பேசாலை மேற்கு (மன்-55) கிராம அலுவலகப் பிரிவில் தனியார் காணி பகுதியில் இடம்பெற்றது.குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருகையில்,

"மன்னார் காற்று மின் செயற்றிட்டம் இரண்டாம் கட்டமாக தேவையான புதிய காற்றாலைகளை பொருத்துவதற்கும் மற்றும் தேவையான உள்கட்டமைப்பு வசதிகளை நிர்மாணிப்பதற்காக இக் காணி சுவீகரிக்க படுகிறது என குறித்த விளம்பர பலகையில் காட்சிப்படுத்தப்பட்டதை அறிந்த காணி உரிமையாளர்கள், பேசாலை பங்குத் தந்தை உட்பட இக்கிராம மக்கள் சிலர் சம்பவ இடத்துக்குச் சென்று காணி அபகரிப்புக்கு எதிராக குரல் எழுப்பினர். (நி-6-285)

# வயல் காணிகள் குத்தகைக்கு வேண்டும் ஆறுமுகத்தான் குள மக்கள் கோரிக்கை

(அக்கராயன்)


முல்லைத்தீவு தண்ணி முறிப்பு ஆறுமுகத்தான் குளம் கிராம மக்களுக்கு வயல் காணிகள் வேண்டும் என்ற கோரிக்கை தீர்க்கப்படாத பிரச்சனையாக உள்ளதாக அப் பகுதி கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

ஆறுமுகத்தான் குளம் கிராமத்தில் 110 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் வாழ்கின்றன. இக்கிராம மக்களுக்கான வயல் காணிகளை நித்தகை குளத்தின் கீழ் வழங்க வேண்டும் என்ற கோரிக்கை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பல தடவைகள் எடுக்கப்பட்டன.

ஆனால் வனவளத் திணைக்களத்தின் பிடியில் நித்தகை குளம் இருப்பதன் காரணமாக வயல் காணியை ஆறுமுகத்தான் குளம் கிராம மக்கள் பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் உள்ளனர்.

மேலும் வயல் நிலம் இல்லாததன் காரணமாக ஆறுமுகத்தான் குளம் கிராம மக்கள் உணவு நெருக்கடியினை எதிர்கொண்டு வருவதாக தெரிவித்ததோடு உரிய அதிகாரிகள், ஆறுமுகத்தான் குளம் கிராம மக்களுக்கு வயல் நிலங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என அக் கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-6-...)

## கிளிநொச்சி அரசாங்க அதிபரை சந்தித்து கலந்துரையாடிய ஐ.நா வதிவிட பிரதிநிதி



(கண்டாவளை)

இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிடப் பிரதிநிதி மார்க் ஆண்ட்ரே பிராஞ் உள்ளிட்ட அதிகாரிகள் நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்டத்திற்கு விஜயமொன்றினை மேற்கொண்டதுடன் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் றூபவதி கேதீஸ்வரனை சந்தித்து கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

இக் கலந்துரையாடலின் போது கிளிநொச்சி மாவட்டத்தின் தற்போதைய நிலைமைகள் தொடர்பான விடயங்கள் விரிவாக ஆராயப்பட்டன.

இக் கலந்துரையாடலில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரன், மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளர் கி.ஸ்ரீபாஸ்கரன், மாவட்ட செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் அ.கேதீஸ்வரன் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிட பிரதிநிதி அதிகாரிகளும் கலந்து கொண்டனர். (நி-6-315)

## ஆரம்பப் பிரிவுக்கு போதிய ஆசிரியர்களை நியமிக்குமாறு கோரி வேரவிலில் ஆர்ப்பாட்டம்



(கண்டாவளை)

கிளிநொச்சி பூநகரி வேரவில் இந்து மகா வித்தியாலயத்தின் ஆரம்ப கல்வி பிரிவிற்கு போதிய ஆசிரியர்களை நியமிக்குமாறு கோரி மாணவர்களின் பெற்றோர்கள் நேற்று பகல் பாடசாலையை மூடி கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

கிளிநொச்சி தெற்கு கல்வி வலயத்திற்கு உட்பட்ட பூநகரி கல்விக்கோட்டத்தின் கீழ் உள்ள மிகவும் பழமை வாய்ந்த பாடசாலையான வேரவில் இந்து மகாவித்தியாலயத்தில் ஆரம்பக் கல்விப் பிரிவுக்கான போதிய ஆசிரியர்கள் நியமிக்கப்படாமையினால் தமது பிள்ளைகளின் கல்வி பாதிக்கப்படுவதாகவும் குறித்த பாடசாலைக்கு ஆசிரியர்களை நியமிக்குமாறு கோரி பாடசாலையின் நுழைவாயிலை மூடி பெற்றோர்கள் குறித்த கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த போராட்டம் தொடர்பில் ஜெயபுரம் பொலிஸார் கிளிநொச்சி தெற்கு வலயக் கல்விப்பணிப்பாளர் கி.கமலராஜன் மற்றும் கோட்டக்கல்வி அதிகாரி ஆகியோர் சம்பவ இடத்திற்கு சென்று நிலைமைகளை பெற்றோர்களுடன் கலந்துரையாடிய பின் நேற்று ஆசிரியர் ஒருவர் நியமிக்கப்பட்டதையடுத்து குறித்த போராட்டம் கைவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-6-315)



ஸ்ரீ பொன்னாலை வரத ராஜப்பெருமாள் தேவஸ்தானத்தின் தீர்த்தத் திருவிழா நேற்று பக்தி பூர்வமாக இடம் பெற்றது. (படம்- கஜிந்தன்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நெற்செய்கையில் தரமான விதையை பயன்படுத்தி அதிக இலாபம் பெறுவோம்

எமது நாட்டின் விவசாயத் துறையில் நெற்செய்கையானது பாரிய பங்களிப்பை வழங்குகின்றது. அவ்வாறே வடமாகாணத்திலும் முக்கிய பயிராக நெற் செய்கையே காணப்படுகின்றது. தற்போது வட மாகாணத்தில் பெரும்போக நெற் செய்கைக்குரிய ஆரம்ப கட்ட நடவடிக்கைகளில் விவசாயிகள் ஈடுபட்டு வருவதனை அவதானிக்க கூடியதாக உள்ளது.

விவசாயப் பெருமக்களாகிய நீங்கள் விவசாயத் திணைக்களத்தின் ஆலோசனைகளின் பிரகாரம், நெற்செய்கையை ஆரம்பித்ததிலிருந்து அறுவடையினை களஞ்சியப்படுத்தி உரிய முறையில் சந்தைப்படுத்தும் வரை உள்ள செயற்பாடுகளை கிரமமாக மேற்கொண்டு நெற்செய்கையினை இலாபம் ஈட்டக் கூடியதாக மாற்ற முடியுமென்பதில் எவ்வித ஐயப்பாடுகளும் இல்லை.

அனைத்து பயிர்செய்கைகளிலும் பயன்படுத்தப்படுகின்ற உயிருள்ள மூலப்பொருளான விதை, தரமான தாக இருத்தல் அத்தியாவசியமாகும். இதுவே வெற்றிகரமான பயிர்ச் செய்கைக்கான மூலாதாரமாகும்.

வட மாகாணத்தின் சராசரி விளைச்சல் ஏனைய நெற்செய்கை செய்யப்படும் மாகாணங்களுடன் ஒப்பிடும்போது பொதுவாக குறைவாக காணப்படுகின்றது. இதற்கு பல காரணங்கள் காணப்படினும் தரமான விதை நெல்லை பாவிக்காமையும் ஓர் முக்கிய காரணமாகும்.

பொதுவாக விவசாயிகளுடன் கலந்துரையாடும் சந்தர்ப்பங்களில், தரமான விதை நெல், சந்தையில் உணவுத்தேவைக்காக பயன்படுத்தும் நெல்லுடன் ஒப்பீட்டளவில் அதிக விலையில் விற்பனை செய்யப்படுவதனால் தம்மால் உற்பத்தி செய்யப்படுகின்ற நெல்லினை சிலர் சுத்திகரித்தும் பலர் சுத்திகரிக்கா மலும் விதை நெல்லாக பயன்படுத்துவதாக தெரிவிக்கின்றனர்.

ஆயினும் தரமான விதை நெல்லை பாவிப்பதன் மூலம் விளைச்சலில் 15 - 20 % அதிகரிப்பை ஏற்படுத்த முடியுமென ஆராய்ச்சி முடிவுகளில் நிரூபிக்கப்பட்டுள்ளது. விவசாயத் திணைக்களத்தினால் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்ற அத்தாட்சிப்படுத்தப்பட்ட விதை நெல்லானது களப்பரிசோதனை மற்றும் விதை ஆய்வுகூட பரிசோதனைகள் மூலம் அத்தாட்சிப்படுத்தப்படுவதனால் சிறந்த விதை நெல்லிற்குரிய அனைத்து இயல்புகளையும் கொண்டிருக்கும் என்பது நிதர்சனமாகும்.

தரமான அத்தாட்சிப்படுத்திய விதை நெல்லை பயன்படுத்தும்போது, பின்வரும் காரணங்களால் நெற்செய்கையில் ஏற்படும் உற்பத்தி செலவை பெருமளவு குறைக்கமுடியும்.

- அதிக முளைதிறனை கொண்டுள்ளமையினால் தேவையான விதையின் அளவு குறைவு
- வேறு இன நெல் வர்க்கங்களின் கலப்பு, களைவிதைகள் என்பன மிகவும் குறைவாக இருப்பதனால் நோய் பீடை தாக்கங்கள், அவற்றை கட்டுப்படுத்தல், களை கட்டுப்பாடுகள் மிகவும் இலகுவாக மேற்கொள்ள கூடியதாக இருக்கும்.
- பயிர்ச்செய்கை கலப்புகளின்றி சீராக (Uniformity) அமைவதனால் அறுவடை மேற் கொள்ளல் இலகு

மேலும் விவசாயிகளாகிய நீங்கள் விதை நெல் வகுப்புக்கள், அவை உற்பத்தி செய்யப்படும் இடங்கள் தொடர்பிலும் அறிந்திருத்தல் தங்களுக்கு நன்மை பயக்கும்.

கீழ் குறிப்பிடும் படிமுறைகளுக் கூடாகவே விவசாயத் திணைக் களத்தினால் விதை நெல் உற்பத்தி மேற்கொள்ளப்படுகின்றது.

இவ் விதை வகுப்புக்கள் இலகுவாக அடையாளம் காணக்கூடியவாறு விதை நெல் பைகளில் விவசாயத் திணைக் களத்தினால் வெவ்வேறு வர்ணங்களில் அரச இலட்சனையுடன் கூடிய சுட்டிகள் (லேபிள்) இடப்படும்.

| விதை நெல் வகுப்பு | உற்பத்தி செய்யும் இடங்கள் |
|---|---|
| இனவிருத்தியாளர் விதை (Breeder Seeds) ↓ | விவசாய ஆராய்ச்சி நிலையங்கள் |
| அத்திவார விதை (Foundation Seeds) ↓ | அரச விதை உற்பத்தி பண்ணைகள் - |
| பதிவு செய்யப்பட்ட விதை (Registered Seeds) ↓ | அரச விதை உற்பத்தி பண்ணை, விதை நெல் உற்பத்தியில் நீண்ட கால பரீட்சய முடைய சிறந்த ஒப்பந்த கமக்காரார்கள். |
| அத்தாட்சிப்படுத்திய விதை (Certified Seeds) | விதை உற்பத்தி சங்கங்கள், தனியார் கம்பனிகள், ஒப்பந்த கமக்காரர்கள் மற்றும் தனியார் விவசாயிகள். |
| வர்த்தக விதை:- (Commercial Seeds) | அவசர நிலைமைகளில் விதை உற்பத்தியில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட விதை வகுப்பு பயன்படுத்தப்படின் அடுத்த பரம்பரையில் அவ் விதைத் தொகுதியானது வர்த்தக விதையாக கருதப்படும். அத்தாட்சிப்படுத்திய விதை நெல் உற்பத்தியில் ஏதாவது காரணங்களினால் அவற்றின் தரத்தில் மிகச்சிறிய ளவில் குறைபாடுகள் ஏற்படின் அவையும் வர்த்தக விதை நெல்லாக கருதப்படும். |

| விதை நெல்லிற்கான ஆய்வு கூட நியமங்கள் | இனவிருத்தியாளர் விதை | அத்திவார விதை | பதிவு செய்யப்பட்ட விதை | அத்தாட்சிப்படுத்திய விதை | வர்த்தக விதை I | வர்த்தக விதை II |
|---|---|---|---|---|---|---|
| ஈரப்பதன் % (ஆகக்கூடியது) | 13 | 13 | 13 | 13 | 13 | 14 |
| முளைதிறன் வீதம் % (ஆகக்குறைந்தது) | 85 | 85 | 85 | 85 | 85 | 85 |
| வாழ்தகவு % (ஆகக்குறைந்தது) | 90 | 90 | 90 | 90 | 90 | 90 |
| தூய வீதம் % (ஆகக்குறைந்தது) | 99 | 99 | 99 | 98 | 98 | 97 |
| அடையாளம் காணக்கூடிய வேறு வர்க்கங்கள் (ஆகக்கூடியது 500g இல்) | 05 | 20 | 40 | 100 | 125 | 150 |
| வேறு பயிர் விதைகள் (ஆகக்கூடியது 500g இல்) | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| களை விதைகள் (ஆகக்கூடியது 500g இல்) | 05 | 05 | 10 | 10 | 10 | 25 |
| சேதமடைந்த விதைகள் (ஆகக்கூடியது 500g இல்) | 200 | 200 | 200 | 200 | 200 | 225 |
| நச்சுக் களை விதை எண்ணிக்கை (ஆகக்கூடியது 500g இல்) | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| வாசனை | நன்று | நன்று | நன்று | நன்று | நன்று | நன்று |
| தோற்றம் | நன்று | நன்று | நன்று | நன்று | நன்று | நன்று |

மேலும் இவ் விதை நெல்லின் வகுப்புக்களுக்கேற்ப இடப்படும் லேபிள்களின் நிறங்கள் பின்வருமாறு

| விதை நெல்லின் வகுப்பு | லேபிளின் நிறம் |
|---|---|
| இனவிருத்தியாளர் விதை | வெள்ளை (இரு இளஞ்சிவப்பு நிறமான கோடுகளுடன்) |
| அத்திவார விதை | வெள்ளை |
| பதிவு செய்யப்பட்ட விதை | பச்சை |
| அத்தாட்சிப்படுத்திய விதை | நீலம் |
| வர்த்தக விதை | மஞ்சள் |

இவ் விதை வகுப்புக்களில், அத்தாட்சிப்படுத்தப்பட்ட விதை வகுப்பே பெரும்பாலும் உணவுற்பத்திக்காக, விவசாயிகளிற்கு விவசாயத் திணைக்களத்தினால் சிபாரிசு செய்யப்பட்டு வழங்கப்படுகின்றது. இருந்த போதிலும் நாட்டின் விதைத் தேவையை கருத்தில் கொண்டு முளைதிறன் பரிசோதிக்கப்பட்ட விதை நெல்லும் சந்தையில் விற்பனை செய்யப்படுகின்றது. இவ் முளைதிறன் பரிசோதிக்கப்பட்ட விதை நெல்லிற்கு வெண்ணிறமுடைய லேபிள்கள் இடப்படுகின்றது. குறித்த விதை நெல் உற்பத்தியாளர்களான சங்கங்கள், தனியார் கம்பனிகள் மற்றும் தனியார் போன்றவர்கள் விவசாயத் திணைக்களத்தின் 2003 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க விதைச்சட்டத்தின் கீழ் பதிவு செய்து, அவர்கள் பயன்படுத்துகின்ற குறித்த லேபிள்களுக்குரிய அனுமதியினை பெற்று பயன்படுத்தல் வேண்டும். அவ் லேபில்களில் குறிப்பிடப்பட்டுள்ள தர நியமங்களுக்கு மேற்குறிப்பிடப்பட்ட நிறுவனங்கள் அல்லது தனியார்களே பொறுப்பானவர்கள்.

விதை சட்டத்தின் பிரகாரம் லேபிள்கள் இடப்படாத விதை பொதிகளை விற்பனை செய்வது தண்டனைக்குரிய குற்றமாகும்.

மேலும் விவசாயத் திணைக்களத்தினால் உற்பத்தி செய்யப்படுகின்ற விதை நெல்லின் விலைகள் விவசாயத் திணைக்களத்தின் நாடுபூராக உள்ள விதை விற்பனை நிலையங்களில் விதை வகுப்பிற்கேற்ப, தற்போது பின்வருமாறு விற்பனை செய்யப்படுகின்றது.

| விதை வகுப்பு | Bg 360 (கீரிசம்பா) | ஏனைய சம்பா இனங்கள் | சிவப்பு/ வெள்ளை நாடு |
|---|---|---|---|
| அத்திவார விதை | 4300.00 | 4000.00 | 3800.00 |
| பதிவு செய்யப்பட்ட விதை | 4200.00 | 3900.00 | 3700.00 |
| அத்தாட்சிப்படுத்திய விதை | 3900.00 | 3600.00 | 3500.00 |
| வர்த்தக விதை | 3800.00 | 3500.00 | 3400.00 |
| முளைதிறன் பரிசோதிக்கப்பட்ட விதை | 3700.00 | 3400.00 | 3300.00 |

(இவ் விலைகள் விவசாயத் திணைக்கள விதை விற்பனை நிலையங்கள் தவிர்ந்த ஏனைய இடங்களில் போக்குவரத்து கூலி, ஏற்றல் இறக்கல் கூலி என்பவற்றினால் சற்று வேறுபடலாம்)

விவசாயப் பெருமக்களாகிய நீங்கள் தங்களது விதை நெல்லை கொள்வனவு செய்யும் போது மேற்படி விடயங்களை கவனத்தில் கொண்டு தரமான விதை நெல்லை பயன்படுத்தும் போது உற்பத்தி செலவினை குறைத்து கூடிய இலாபத்தினை பெற்றுக்கொள்ள முடியும் என்பது எனது எதிர்பார்ப்பாகும்.

**திருமதி. சுதர்சன் சரவணப்பிரியா,**
**விவசாயப் போதனாசிரியர்,**
**விதை அத்தாட்சிப்படுத்தல் சேவை,**
**விவசாயத் திணைக்களம்,**
**யாழ்ப்பாணம்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 2

காவியத் தொடர் 277





“வேறு யாரும் இல்லை என்று உன் தந்தை சொல்கிறார்; உன் அண்ணன் கூட நேற்றுப் போய் விட்டானாமே?”

“அவன் போனால் என்ன? உனக்கு இரண்டு கைகள், உன்னோடு வந்தவனுக்கு இரண்டு கைகள் இல்லையா?”

“எங்களுக்குப் படகு வலிக்கத் தெரியாது.” “படகு வலிப்பது என்ன மந்திர வித்தையா! துடுப்பைப் பிடித்து வலித்தால் தானே படகு போகிறது!”

“திசை தெரிய வேண்டும் அல்லவா? நடுக்கடலில் திசை தெரியாமல் போய்விட்டால்.?” “நடுக்கடலில் திசை தெரியவிட்டால் முழுகிச் சாகுங்கள்! அதற்கு நான் என்ன செய்யட்டும்!”

கலங்கரை விளக்கின் அருகில் அவர்கள் வந்து விட்டார்கள். வந்தியத்தேவனும் அத்துடன் பேச்சை நிறுத்திவிட விரும்பினான். மேலும் பேச்சை வளர்த்துப் பூங்குழலியின் மறுப்பை உறுதிப்படுத்திவிட அவன் விரும்பவில்லை. அவள் அவ்வளவு கண்டிப்பாக மறுமொழி சொன்ன போதிலும், அவளுடைய குரலும் பேச்சின் தோரணையும் அவனுடைய உள்ளத்தில் சிறிய தொரு நம்பிக்கைச் சுடரை உண்டாக்கியிருந்தன.

இரண்டாம் முறை படுத்த பிறகு வெகு நேரம் வந்தியத்தேவனுக்குத் தூக்கம் வரவில்லை. ஏதேதோ எண்ணங்களினால் அவனுடைய உள்ளம் வெகுவாகக் குழம்பிக் கொண்டிருந்தது. நாலாம் ஜாமத்தின் ஆரம்பத்திலேதான் தூங்கினான்.

தூக்கத்தில் வந்தியத்தேவன் கனவு கண்டான். பாய் மரம் விரித்த சிறிய படகில் பூங்குழலியும் அவனும் எதிரெதிராக அமர்ந்திருந்தார்கள். நாலாபுறமும் கடல் எங்கு நோக்கினாலும் ஜலம். இனிய பூங்காற்று படகு அக்காற்றில் மிதப்பது போலப் போய்க் கொண்டிருந்தது. பூங்குழலியின் முகம் அழகே வடிவமாகப் பொலிந்தது. சுருண்ட மயிர் நெற்றியில் ஊசலாடிக் கொண்டிருந்தது. சேலைத் தலைப்புப் பறந்தது. எங்கே போகிறோம், எதற்காகப் போகிறோம் என்பதெல்லாம் வந்தியத்தேவனுக்கு மறந்து போய் விட்டது. பூங்குழலியுடன் படகில் போவதற்காகவே இத்தனை நாள் பிரயாணம் செய்து வந்ததாகத் தோன்றியது. ஒன்றே ஒன்று குறைவாயிருந்தது. அது என்ன? அது என்ன? ஆ! பூங்குழலியின் பாட்டு! சேந்தன்அமுதன் சொல்லியிருந்தான் அல்லவா?

“பெண்ணே! உன் பவழ வாயைத் திறந்து ஒரு பாட்டுப் பாட மாட்டாயா?” என்றான் வந்தியத்தேவன்.

“என்ன சொன்னாய்?” என்று பூங்குழலி புன்னகையுடன் கேட்டாள். ஆகா! அந்தப் புன்னகை ஏழு உலகமும் பெறாதா?

“உன் கனிவாயைத் திறந்து ஒரு கீதம் இசைக்க மாட்டாயா என்றேன்.”

“கீதம் இசைத்தால் எனக்கு என்ன தருவாய்?”

“உன் அருகில் வந்து உன் அழகிய கன்னத்தில்.”

பூங்குழலி உடனே தன் மடியிலிருந்து ஒரு கூரிய கத்தியை எடுத்துக் கொண்டாள். கத்தி பிடித்த கையை ஓங்கினாள்.

“இதோ பார்! அந்தப் பாய் மரத்துக்கு அப்பால் ஒரு அணுவளவு நீ வந்தாலும் உன்னை இந்தக் கத்தியால் குத்தி விடுவேன். கடல் மீன்கள் மிகப் பசியோடிருக்கின்றன!” என்றாள்.

### ஆறாம் அத்தியாயம்
### மறைந்த மண்டபம்

மறுநாள் காலையில் உதய சூரியனுடைய செங்கிரணங்கள் வந்தியத்தேவனைத் தட்டி எழுப்பின. உறக்கம் நீங்கிய பிறகும் சுய உணர்வு வருவதற்குச் சிறிது நேரம் பிடித்தது. அவன் மேல் விழுந்தது சூரிய வெளிச்சமா அல்லது கலங்கரை விளக்கின் ஒளியா என்று தெளிவதற்குச் சிறிது நேரம் பிடித்தது. முதல் நாள் இரவு அனுபவங்களில் எது உண்மை, எது கனவு என்று எண்ணிப் பார்த்தபோது அவனுக்கு ஒரே குழப்பமாயிருந்தது.

(தொடரும்...)



## சிறுவர் அரங்கம்

## தேடிய பொருள் கிடைத்ததா?

(நேற்றைய தொடர்ச்சி...)

அட அவ்வளவுதான் லிண்டா கதற ஆரம்பித் துவிட்டாள். தப்பிக்க வழி கேட்டால் என்னை மாட்டிவிட வழி சொல்கிறாய், நீ தேவதை தானா எனக்கு உன்மேல் சந்தேகமாய் இருக்கிறது என்றாள் லிண்டா. அதுதான் வழி , அவனை சந்தித்து ஒரு கேள்விதான் கேட்க வேண்டும்.

அந்த கேள்வி உனக்கு தப்பிக்க ஒரு வழி கொடுக்கும் என கூறியது அந்த குரல். அடடா, இது என்ன வம்பா போச்சு, அவன் கிட்ட போய் நான் என்ன கேள்வி கேட்க முடியும், என்னை கொல்ல போறியானு கேட்கவா முடியும்,



அச்சோ வசமா மாட்டிகிட்டேன் என புலம்பி கொண்டே இருந்தாள் லிண்டா. சட்டெனெ ஒரு கேள்வி தோன்றியது, சரி கேட்டுவிடலாம் வாழ்வோ, சாவோ பார்த்துவிடலாம் என தன்னம்பிக்கையை வரவழைத்து கொண்டே அவன் இருக்கும் திசையை நோக்கி நடந்தாள்.

லிண்டா அவன்முன்னே தோன்றினாள். அவன் என்ன தைரியம் உனக்கு என் முன்னே இவ்வளவு அசால்ட்டாக நிற்கிறாய் என்றான். லிண்டா மனதிற்குள் ஒரு கேள்விதான கேட்க வேண்டும் என்ன கேள்வி, என்ன கேள்வி, என சிந்தித்து கொண்டே இருந்தாள்.

மந்திரவாதி நான் உன்னை தான் கேட்கிறேன் என சத்தமாக கத்தினான். லிண்டா அவனிடம், உன்னை தனிமை படுத்தியது யார்? என கேட்டாள். அவ்வளவுதான் மந்திரவாதி உடைந்து போனவனாய் அமைதியாக அமர்ந்தான்.

அவன் சோகமாக, யாரும் எனக்காக இல்லை என்ற எண்ணமே என்னை தனிமைப்படுத்தியது, அதற்காவே இந்த காட்டுக்குள் வந்து எனக்கான மாளிகையை அமைத்தேன் என்றான் மந்திரவாதி. அட இது என்ன நம்ம கதையா இருக்கு என யோசித்து கொண்டே இன்னும் தன்னம்பிக்கையுடன் நான் உனக்காக இருக்கிறேன் இவர்களை விட்டுவிடு என்றாள்.

விரக்தியின் உச்சத்தில் இருந்த லிண்டாவிற்கும் இப்போது துணை கிடைத்து விட்டது. மந்திரவாதியும் இப்போது அனைவரையும் விடுவித்தான். அந்த மாயாஜாலம் நிறைந்த இடம் பழைய மாதிரி காடாக மாறியது.

அங்கு இருந்த அசையும் பொருட்கள் அனைத்தும் மனிதர்களாக மாறின. மந்திரவாதியும் நார்மலாக மாறினான். தேடிய அன்பை கிடைத்த மகிழ்ச்சியில் லிண்டா அவனுடன் வீட்டுக்கு வந்தாள். லிண்டாவின் உதவும் குணத்தால் மற்றவர்களையும் காப்பாற்றினாள்.

அவளும் இப் போது அவனுடன் அவள் வீட்டின் அருகில் இருந்த அருவியில் மகிழ்ச்சியாக விளையாடினாள். பூக்கள் நிறைந்த அந்த தோட்டத்தை பார்த்து மகிழ்ந்தாள். முன்பை விட இன்னும் மகிழ்ச்சியாக இருந்தாள் லிண்டா.

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைப் பண்பு என்பது தற்சார்பற்று இருத்தல் நலம். தன்னலம் கருதிய தலைமை இன்றைய நிலைமையில் நிர்வாகத்தை தலைகீழாக மாற்றும் வல்லமை கொண்டது. – யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தமிழ் மக்கள் ஆதரிக்கக்கூடிய சிங்களத் தலைவர்கள் இருக்கிறார்களா?

இலங்கையில் இன ஒற்றுமை ஏற்படக் கூடிய வாய்ப்பு அறவே இல்லை என்பதை அறுதியிட்டுக் கூறமுடியும்.

ஏனெனில் இந்த நாட்டில் தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய சிங்களத் தலைவர்கள் யாரும் இல்லை என்பதே உண்மை.

நிலைமை இதுவாக இருக்கையில், இலங்கையின் ஆட்சி அதிகாரத்தை தம் வசம் வைத்திருக்கக்கூடிய பெரும்பான்மை சிங்கள இனத்தில் தமிழ் மக்கள் ஆதரிக்கக்கூடிய சிங்களத் தலைவர்கள் எவரும் இல்லை எனும்போது தமிழ் – சிங்கள இன ஒற்றுமை ஏற்படுவதற்கு சந்தர்ப்பம் இல்லை என்பதை அறுதியிட்டுக்கூறமுடியும்.

இதை நாம் கூறும்போது, எச்சந்தர்ப்பத்திலேனும் சிங்களத் தலைவர்களை தமிழ் மக்கள் ஆதரித்து தமது நல்லெண்ணத்தை வெளிப்படுத்தியுள்ளனரா என்று கேட்டால், ஆம் என்பதே அதற்கான பதிலாகும்.

உண்மை கடந்த காலங்களில் ஜனாதிபதித் தேர்தல்கள் இடம்பெற்றபோது சந்திரிகா குமாரதுங்க, சரத் பொன்சேகா, மைத்திரிபால சிறிசேன, சஜித் பிரேமதாஸ ஆகியோரைத் தமிழ் மக்கள் ஆதரித்தனர்.

அதிலும் ஜனாதிபதித் தேர்தலின்போது மைத்திரிபால சிறிசேனவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பகிரங்கமாக ஆதரித்தது. தமிழ் மக்கள் தங்களின் கணிசமான வாக்குகளை மைத்திரிக்கு அளித்தனர்.

தமிழ் மக்களின் வாக்குகள் மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதி ஆசனத்தில் அமர்த்தியது.

இருந்தும் தமிழ் மக்களின் நம்பிக்கைக் குரியவராக மைத்திரிபால சிறிசேன செயற்படவில்லை.

மாறாக மகிந்த ராஜபக்ஷவைப் பிரதமராக்கி அரசியலையும் நாட்டையும் சின்னாபின்னப்படுத்தி எல்லாவற்றையும் போட்டுடைத்தார்.

இதேபோல ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவை எதிர்த்து போட்டியிட்ட சரத் பொன்சேகாவை தமிழ் மக்கள் ஆதரித்தனர். ஆனால் சரத் பொன்சேகா தன்னை ஒரு சிங்கள இனவாதியாகப் பல சந்தர்ப்பங்களில் நிரூபித்தார்.

ஈற்றில் நடந்த ஜனாதிபதித் தேர்தலில், சஜித் பிரேமதாஸவை தமிழ் மக்கள் ஆதரித்தனர்.

இருந்தும் எந்தச் சந்தர்ப்பத்திலும் தமிழ் மக்கள் தன்னை ஆதரித்தது பற்றி சஜித் பிரேமதாஸ பிரஸ்தாபிக்கவேயில்லை.

அவரைப் பொறுத்தவரை தமிழ் மக்கள் தன்னை ஆதரிப்பது தனது எதிர்கால அரசியலுக்கு நல்லதல்ல என்ற நினைப்பு மட்டுமே இருந்தது.

இப்போதுகூட ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் தொடர்பில் சர்வதேச விசாரணை அவசியம் என வலியுறுத்துகின்ற சஜித் பிரேமதாஸ; வன்னிப் பெருநிலப்பரப்பில் நடந்த தமிழின அழிப்புத் தொடர்பில் சர்வதேச விசாரணை தேவை என்ற கோரிக்கையை ஒருபோதும் முன்வைக்கவில்லை.

மாறாக வன்னிப் பெருநிலப்பரப்பில் நடந்த யுத்தம் தொடர்பில் சர்வதேச விசாரணையை அனுமதிக்க முடியாது என சஜித் பிரேமதாஸ பகிரங்கமாகக் கூறியிருந்தார்.

ஆக, தமிழ் மக்கள் நம்பி வாக்களித்த சிங்களத் தலைவர்கள் கூட, தமிழ் மக்களுக்குத் துரோகம் இழைத்தனர். இதுவே உண்மையும் சத்தியமுமாகும்.

நிலைமை இதுவாக இருக்கும்போது, தமிழ் மக்கள் ஆதரிக்கக்கூடிய சிங்களத் தலைவர்கள் எவரும் இல்லை என்பது உறுதியாகிற தல்லவா.

## வாக்கு பலத்தினால்
# எதிர்க் கட்சிகளின் எதிர்ப்பினை மீறி
## அரங்கேறியது உள்நாட்டு இறைவரி சட்டமூலம்

எதிர்க்கட்சிகளின் கடுமையான எதிர்ப்புக்களுக்கும் மத்தியில் உள்நாட்டு இறைவரி (திருத்தச்) சட்டமூலம் 45 மேலதிக வாக்குகளினால் நிறைவேற்றப்பட்டது.

இந்த சட்டமூலத்துக்கு ஆதரவாக 103 வாக்குகளும் எதிராக 58 வாக்குகளும் அளிக்கப்பட்ட நிலையில் 45 மேலதிக வாக்குகளினால் நிறைவேற்றப்பட்டது.

உள்நாட்டு இறைவரி (திருத்தச்) சட்டமூலம் புதன்கிழமை எதிர்க்கட்சிகளின். கடுமையான எதிர்ப்புக்களுக்கு மத்தியில் நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் செமசிங்கவினால் சபையில் சமர்ப்பிக்கப்பட்டு இருநாள் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதற்கமைய புதன் கிழமை மாலை 4.30 மணிமுதல் இரவு 7.30 மணி வரையும் அதே போன்று வியாழக்கிழமை மாலை 4.30 மணி முதல் இரவு 7 மணி வரையும் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

நேற்று வியாழக்கிழமை விவாத முடிவில் எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி வாக்கெடுப்பைக் கோரினார்.

இதனையடுத்து இடம்பெற்ற இலத்திரனியல் முறையிலான வாக்கெடுப்பிலேயே 45 மேலதிக வாக்குகளினால் இந்த சட்டமூலம் அரசாங்கத்தால் நிறைவேற்றப்பட்டது.

சட்டமூலத்துக்கு ஆதரவாக அரசுடன் இணைந்து சுயாதீன எதிர்க்கட்சி எம்.பிக்களாக செயற்படும் அலி சப்ரி ரஹீம், நிமல் லான்சா மற்றும் அதாவுல்லா ஆகியோர் வாக்களித்தனர்.

எதிராக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, ஜே.வி.பி, தமிழ் தேசியக் கூட்டமைப்பு மற்றும் சுயாதீன எதிர்க்கட்சி எம்.பி.க்கள் வாக்களித்தனர்.

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கட்சியினர் மற்றும் விக்னேஸ்வரன் ஆகியோர் வாக்களிப்பில் பங்கேற்கவில்லை. மொத்தமாக இந்த வாக்களிப்பில் 63 எம்.பி.க்கள் பங்கேற்கவில்லை. (ம-7,9)

## யானை தாக்கியதில் முதியவர் பலி

(மூதூர்)

மூதூர் - பட்டித்திடல் பகுதியில் நேற்று அதிகாலை யானையின் தாக்குதலுக்குள்ளாகி முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவர் தோப்பூர் - பட்டித்திடல் பகுதியைச் சேர்ந்த முருகன் இராசிங்கம் (வயது 69) என பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த நபர் சேனைக் காவலில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது யானை தாக்கி உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. யானை பாதுகாப்பு வேலியையும் சேதப்படுத்தியுள்ளது.

குறித்த சம்பவம் இடம்பெற்ற இடத்திற்கு மூதூர் பொலிஸார் வருகைதந்து சடலத்தை பார்வையிட்டதுடன் சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது. (ம-7,9)

## கசிப்பு உற்பத்தி நிலையம் பொலிஸாரால் முற்றுகை

(வத்திராயன்)

வத்திராயன் தெற்கு கிராமத்தில் உள்ள வீடு ஒன்றில் கசிப்பு உற்பத்தி இடம்பெற்று வந்த நிலையில் நேற்று வியாழக்கிழமை மருதங்கேணிப் பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது நான்கு கலன் கோடா உள்ளிட்ட உபகரணங்களுடன் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

கசிப்பு உற்பத்தி இடம்பெற்று வருகின்றமை தொடர்பில் மருதங்கேணி பொலிஸ் விஷேட புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் பொலிஸார் வீட்டை சோதனையிட்டனர்.

இதன்போதே கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் உபகரணங்கள் மற்றும் நான்கு கலன் கோடா என்பனவற்றை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். (ம-7,9,60)

## அனுமதியின்றி வேப்பமரங்களை ஏற்றிச்சென்ற சாரதி பொலிஸாரால் கைது

(மல்லாகம்)

அனுமதிப் பத்திரம் இன்றி வேப்பமரங்களை ஏற்றிச் சென்ற 46 வயதுடைய சாரதி, சங்கானையில் வைத்து நேற்று முன்தினம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது, குறித்த மரக்குற்றிகளை ஏற்றிச் சென்ற வாகனம் மற்றும் மரக் குற்றிகள் என்பன பறிமுதல் செய்யப்பட்டன.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன் அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ம-7,9,104)

## ரயிலில் மோதுண்டு தந்தை, மகள் பலி

(கந்தளாய்)

நபரொருவர் தனது மகளுடன் ரயிலில் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ரஜஎல பிரதேசத்தில் இந்த சம்பவம் பதிவாகியுள்ளது.

நேற்று முன்தினம் திருகோணமலையில் இருந்து கொழும்பு கோட்டை நோக்கி பயணித்த ரயிலில் தனது மகளுடன் பாய்ந்து நபர் ஒருவர் தற்கொலை செய்து கொண்டதாக கந்தளாய் பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கு அமைய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கந்தளாய் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கந்தளாய் பேராறு பகுதியைச் சேர்ந்த 38 வயதான ஒருவரும் 6 வயதுடைய மகளுமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்தவரின் மனைவி வெளிநாட்டிற்கு வேலைக்குச் சென்றுள்ளதாகவும் அங்கு அவர் வேறொரு நபருடன் கள்ளத்தொடர்பில் இருப்பதை அறிந்து மனவேதனை அடைந்து தனது மகளுடன் தற்கொலை செய்து கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தந்தையும் மகளும் நீண்டநேரமாக ரயில் தண்டவாளத்தின் அருகே நின்று கொண்டிருந்ததாகவும், ரயில் வந்ததும் மகளை தள்ளிவிட்டு தானும் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டனர் என நேரில் பார்த்தவர்கள் கூறுகின்றனர்.

சடலம் கந்தளாய் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை கந்தளாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,9)

## பேருந்து பயணி மீது துப்பாக்கிச் சூடு

அம்பலாந்தோட்டை பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் பெண் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அம்பலாந்தோட்டையில் இருந்து பயணித்த பேருந்து ஒன்றிலேயே துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் பேருந்தை நிறுத்திவிட்டு அதில் ஏறி குறித்த பெண்ணை நோக்கி துப்பாக்கியால் சுட்டதில் காயமடைந்த பெண் அம்பலாந்தோட்டை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அம்பலாந்தோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைப் பொருளாதார நெருக்கடியும் கடன் மறுசீரமைப்பும் ஒரு தொகுப்பு

27

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.



கடன் தள்ளுபடியின் போது உள்ளூர் கடன் மறுசீரமைப்பு விடயம் தலைதூக்கியது. ஏனெனில், எந்த வெளிநாட்டுக் கடன் வழங்குநரும் உள்நாட்டுக் கடனை மறுசீரமைக்காமல் தங்கள் கடனை மட்டும் மறுசீரமைக்க விரும்பப் போவதில்லை.

இலங்கையிலுள்ள வங்கி வைப்பாளர்களைப் பாதிக்காத வகையில் உள்நாட்டுக் கடனை மறுசீரமைப்பதற்கு அரசாங்கம், நிதி அமைச்சு மற்றும் சர்வதேச நாணய நிதியம் ஆகியன ஒத்துழைப்பு வழங்கியிருப்பது மகிழ்ச்சியளிக்கிறது. உள்நாட்டுக் கடனை மறுசீரமைப்பதில் வைப்பாளர்களுக்கு இழப்பு அல்லது பாதிப்பு ஏற்படாது என்று நாங்கள் உத்தரவாதம் அளிக்கிறோம். மேலும், வங்கி வட்டியும் இதனால் பாதிக்கப்படாது. செல்லுபடியாகும் காலம் வரை நிலையான வைப்புகளுக்கு உரிய வட்டி வழங்கும். அந்த நிலையான வைப்புக்களுக்கு பாதிப்பு ஏற்பட்டிருந்தால் இன்று மக்கள் வீதியில் இறங்கி போராட்டம் நடத்தியிருப்பார்கள். ஆனால் அவ்வாறான நிலை ஏற்படுவதற்கு இடமளிக்கப்படவில்லை.

ஓய்வூதியம் மற்றும் ஊழியர் சேமலாப நிதியை செலுத்துவதற்கு பெருமளவான பிணைமுறிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இதற்கு மாற்று தீர்வுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதில் ஒன்று வட்டி விகிதத்தைக் குறைப்பது. மற்றொன்று கடனை மீளச் செலுத்துவதை ஒத்திவைப்பது. இதன் காரணமாக, ஊழியர்களின் EPF/ETF மற்றும் ஏனைய நிதியங்களில் உள்ள பணம் பாதுகாக்கப்படுகிறது.

மேலும், இந்த நிதியங்களுக்கு 2025 வரை 12% வட்டி செலுத்த அரசு உத்தரவாதம் அளித்துள்ளது. ஆனால் தற்போது வட்டி விகிதம் பெருமளவு குறைந்துள்ளது. அரசு உத்தரவாதம் அளித்துள்ள வட்டியை வழங்கும் என்று நம்புகிறோம். பணவீக்கத்தால் ஊழியர் நிதியங்களுக்கு அரசு வழங்கும் வட்டி வருமானம் அதிகமாக உள்ளது. இருப்பினும், வட்டி வருமானத்தின் இந்த பிரச்சினை பங்களிப்பு நிதிகளை மட்டுமே பாதிக்கிறது. எனவே, ஊழியருக்கு எந்த நஷ்டமும் ஏற்படாது. அனைத்துப் பணத்தையும் இழப்பதற்குப் பதிலாக, உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பின் மூலம் இந்த மட்டத்திலாவது பணத்துடன் குறிப்பிடத்தக்க வட்டியைப் பெறுவது மகிழ்ச்சியான விடயமாகும்.

இந்த பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காணப்பட்ட பிறகு நாட்டில் புதிய வேலை வாய்ப்புகள் உருவாகி பணவீக்கம் குறையும். இத்திட்டத்தின் மூலம் நாடு பல பொருளாதார நன்மைகளைப் பெறும். நாட்டுக்குத் தேவையான பொருட்களையும் மருந்துப் பொருட்களையும் எளிதாகப் பெறலாம். மொத்த உள்நாட்டு உற்பத்தி அதிகரிக்கிறது. அந்த நிலையை அடைய நாம் சில தியாகங்களைச் செய்ய வேண்டும். இல்லையேல் நாடு மீண்டும் பொருளாதார நெருக்கடிக்குள் சிக்குவதைத் தடுக்க முடியாது.

வங்கிச் சங்கமும் உள்ளூர் வங்கிகளும் ஜனாதிபதியின் திட்டத்திற்கு ஆதரவு வழங்கின. இதனால், வங்கி வட்டியை குறைக்க திட்டமிடப்பட்டுள்ளது. அடுத்த இரண்டு மாதங்களில் வட்டி வீதம் குறைக்கப்படலாம். குறைந்த வட்டி வீதத்தின் கீழ், சிறிய மற்றும் நடுத்தர வர்த்தகர்கள், ஏற்றுமதி தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் மற்றும் பெரிய வர்த்தகர்கள் தங்கள் வர்த்தகங்களை மேம்படுத்த முடியும். இதற்குத் தேவையான உதவிகளை வழங்க வங்கிகள் தயாராக உள்ளன. இலங்கை மத்திய வங்கியின் ஆதரவினாலும் வங்கிகளின் ஒற்றுமையினாலும் இந்த நிதி நெருக்கடியில் இருந்து மீள முடியும் என நம்புகிறேன்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் நாட்டைக் கட்டியெழுப்ப முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டத்திற்கு பங்களிக்கும் திறன் வங்கியாளர்களுக்கு உள்ளது. எதிர்காலத்தில் வாடிக்கையாளர்களுக்கு தேவையான கடன்களைக் குறைந்த வட்டியில் வழங்க முடியும். என்று இலங்கை வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரி ரசல் பொன்சேக்கா தெரிவித்தார்.

### கடன் மறுசீரமைப்பு பற்றி ஃபிட்ச் மதிப்பீடுகள் (Fitch Ratings)

இலங்கையின் உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்புத் திட்டத்தில் உள்ள அபாயங்கள் குறித்து எச்சரித்துள்ள போதிலும், உள்ளூர் வங்கித் துறையில் அதன் தாக்கம் குறித்த நிச்சயமற்ற தன்மைகளைத் தீர்க்கிறது என்று குறிப்பிட்டுள்ளது.

உள்நாட்டுக் கடனைக் கையாள்வதற்கான இலங்கை அரசாங்கத்தின் முன்மொழிவு, உள்ளூர் வங்கித் துறையில் இறையாண்மையின் கடன் மறுசீரமைப்பின் தாக்கத்தைச் சுற்றியுள்ள நிச்சயமற்ற தன்மையைத் தீர்ப்பதற்கான ஒரு குறிப்பிடத்தக்க [illegible] ஆனால் பல காரணிகளால் சிக்கல்கள் எழக்கூடும் என்று ஃபிட்ச் மதிப்பீடுகள் தெரிவித்துள்ளது.

Fitch இன் அடிப்படை வழக்கு, வங்கிகள் வைத்திருக்கும் திறைசேரி உண்டியல்கள் (treasury bills) மறுசீரமைப்புக்கு உட்பட்டதாக இருக்கும் என்று எதிர்பார்க்கவில்லை ஆனால் வங்கிகளின் திறைசேரி பிணை முறிகளில் இதன் தாக்கம் இருக்கும் என்று கருதப்படுகிறது.

### நாடுகளின் பொதுக் கடன் மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) விகிதம்

பொதுக் கடன் என்று கூறும் போது அது உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கடன் இரண்டினதும் மொத்தமாகும். கடன்-மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதம் என்பது ஒரு நாட்டின் அரசாங்கக் கடனை அதன் மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் (GDP) ஒப்பிடும் ஒரு பொருளாதார அளவீடு ஆகும் (இது நாடு உற்பத்தி செய்யும் அனைத்து பொருட்கள் மற்றும் சேவைகளின் மதிப்பைக் குறிக்கிறது). ஒரு நாட்டின் பொருளாதாரத்தின் ஸ்திரத்தன்மை மற்றும் ஆரோக்கியத்தை தீர்மானிக்க பொதுவாகப் பயன்படுத்தப்படுகிறது. கடனிலிருந்து GDP விகிதம் ஒரு சதவீதமாக வெளிப்படுத்தப்படுகிறது மற்றும் ஒரு நாட்டின் தற்போதைய கடன்களைத் திருப்பிச் செலுத்தும் திறனைப் பற்றிய ஒரு பார்வை மதிப்பீட்டை இது வழங்குகிறது.

குறைந்த கடன்-மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதம் கொண்ட நாடுகள் தங்கள் கடன்களை ஒப்பீட்டளவில் எளிதாக திருப்பிச் செலுத்த முடியும். வருமானம் ஈட்டுவதற்குப் போராடும் நாடுகள் அல்லது அதிகக் கடனைக் கொண்ட நாடுகள் அதிக கடன்-மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதத்தைக் கொண்டிருக்கின்றன. 77%இற்க்கும் மேல் உள்ள கடன்-மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதங்கள் பொருளாதார வளர்ச்சியைத் தடுக்கலாம் மற்றும் (சில சமயங்களில்) ஒரு நாட்டின் கடன்களைத் திருப்பிச் செலுத்தும் அபாயத்தில் வைக்கலாம், இது அதன் பொருளாதாரம் மற்றும் நிதிச் சந்தைகளில் அழிவை ஏற்படுத்தலாம்.

2022ஆம் ஆண்டு தரவு அடிப்படையில் அதிக கடன்-மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதங்களைக் கொண்ட முதல் 12 நாடுகள் (%) பின்வருவனவாகும்.

வெனிசுலா - 350%, ஜப்பான் - 266%, சூடான்- 259%, கிரீஸ்- 206%, லெபனான் - 172%, கபோ வெர்டே (Cabo Verde) - 157%, இத்தாலி - 156%, லிபியா - 155%, போர்ச்சுகல் - 134%, சிங்கப்பூர் - 131%, பஹ்ரைன்- 128%, அமெரிக்கா - 128%

2022ஆம் ஆண்டு தரவு அடிப்படையில் மிகக் குறைந்த கடன்-மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதங்களைக் கொண்ட முதல் 12 நாடுகள் (%)

புருனே - 3.2%, ஆப்கானிஸ்தான் - 7.8%, குவைத் - 11.5%, காங்கோ (டெம். பிரதிநிதி) - 15.2%, எஸ்வதினி - 15.5%, புருண்டி - 15.9%, பாலஸ்தீனம் - 16.4%, ரஷ்யா - 17.8%, போட்ஸ்வானா - 18.2%, எஸ்டோனியா - 18.2%

### ஜப்பான்

ஜப்பான் 266% விகிதத்தில் இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளது. 1992 இல், ஜப்பானின் நிக்கேய் (பங்குச் சந்தை) செயலிழந்தது. அரசாங்கம் வங்கிகள் மற்றும் காப்பீட்டு நிறுவனங்களை பிணையெடுத்தது, அவர்களுக்கு குறைந்த வட்டியில் கடன் வழங்கியது. வங்கிகள் ஒருங்கிணைக்கப்பட்டு தேசியமயமாக்கப்பட்டன, மேலும் போராடும் பொருளாதாரத்திற்கு உதவ பிற தூண்டுதல் முயற்சிகள் பயன்படுத்தப்பட்டன. இருப்பினும், இந்த நடவடிக்கைகள் ஜப்பானின் கடன் வியத்தகு அளவில் அதிகரித்தன.

### அமெரிக்கா

இந்தப் பட்டியலில் உள்ள மற்றொரு சுவாரஸ்யமான நுழைவு அமெரிக்கா ஆகும். அதன் கடன்-ஜிடிபி விகிதம் உலகின் அனைத்து நாடுகளிலும் 12ஆவது இடத்தில் உள்ளது.

உலகிலேயே அதிக மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அமெரிக்கா பெருமை கொள்கிறது என்றாலும், அது சம்பாதிப்பதை விட அதிகமாக செலவழிக்கிறது. தேசியக் கடனுக்கான முக்கிய பங்களிப்பாளர்களில் உலகின் மிகப் பெரிய இராணுவ வரவு செலவுத் திட்டம், வரிக் குறைப்புக்கள் (அரசாங்க வருமானத்தைக் குறைப்பது மற்றும் பொருளாதார வளர்ச்சியில் அரிதாகவே விளைகிறது), கொவிட்-19 நிவாரண முயற்சிகள் மற்றும் மருத்துவக் காப்பீடு போன்ற கட்டாய-ஆனால் நிதியில்லாத திட்டங்கள் ஆகியவை அடங்கும்.

(தொடரும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வைத்தியர்கள்...

யாழ்.போதனா வைத்தியசாலையில் அண்மையில் மருத்துவத் தவறினால் 8 வயதுச் சிறுமியொருவரின் இடது கை அகற்றப்பட்ட சம்பவம் தொடர்பில் உரிய முறையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இது குறித்து பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஜி.விஜேசூரிய கருத்துத் தெரிவிக்கையில்,

"இந்த விடயத்தில் வைத்தியர்கள் தவறிழைத்திருப்பார்களாயின் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்.

வைத்தியசாலை பணிக்குழாமினரால் ஏதேனும் தவறுகள் ஏற்படுமாயின் அதற்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது" இவ்வாறு தெரிவித்துள்ளார்.

4 நாட்களுக்கு மேலாக நிலவிய காய்ச்சல் காரணமாக யாழ்ப்பாணம், மல்லாகம் பகுதியைச் சேர்ந்த குறித்த சிறுமி கடந்த மாதம் 24ஆம் திகதி தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

காய்ச்சல் தொடர்ந்தும் நீடித்ததை அடுத்து அவர் கடந்த 25ஆம் திகதி இரவு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

இதனையடுத்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் குறித்த சிறுமிக்கு, உடலுக்கு மருந்துகளை செலுத்தும் கெனுலா பொருத்தப்பட்டு அதனூடாக மருந்துகள் செலுத்தப்பட்டுள்ளன.

இந்தநிலையில் கெனுலா பொருத்தப்பட்ட கை செயலிழந்தமையை அடுத்து கடந்த 2ஆம் திகதி வைத்தியர்கள் அவரது இடது கையின் மணிக்கட்டுக்கு கீழான பகுதியை சத்திரசிகிச்சை மேற்கொண்டு துண்டித்திருந்தனர்.

இச் சம்பவமானது பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ள நிலையில், வடமாகாண ஆளுநர், யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் மற்றும் பொலிஸாரிடம் சிறுமியின் பெற்றோர் இது குறித்து முறைப்பாடளித்துள்ளனர்.

இதனையடுத்து சம்பவம் தொடர்பாக பல கோணங்களிலும் தற்போது விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(ம-7,9)

## சனல் 4...

பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சனல் 4 இன் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஆவணப் படத்தை ஜெனிவா மனித உரிமை பேரவை அமர்விற்கு முந்தைய நாடகமாக அரசாங்கம் கருதுகின்றது.

இதன் காரணமாக சனல் 4 வெளியிட்ட காணொளி குறித்து நிதானமான விதத்தில் பதிலை வெளியிட வேண்டும் எனவும் அரசாங்கம் கருதுகின்றது.

சனல்4 இன் ஆவணப்படம்ஜெனிவா அமர்வு இடம்பெறும் நேரத்தை மையப்படுத்தி வெளியாகியுள்ளதால் அரசாங்கம் அவசரப்பட்டு நடவடிக்கைகள் எதனையும் எடுக்கக்கூடாது என அமைச்சரவைக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

எனினும் சனல் 4 குற்றம்சாட்டியவர்களே அதற்கான பதில்களை வழங்க வேண்டும். அரசாங்கம் வழங்கதேவையில்லை எனவும் ஜனாதிபதி கூறியுள்ளார். (ம-7,9)

## கோட்டாவின்...

சர்ச்சைக்கு உள்ளாகியுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பாக சனல் 4 நிறுவனம் வெளியிட்ட ஆவணத்தில் முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளிக்கும் வகையில் கோட்டாபய ராஜபக்ஷ அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்.

இந்த அறிக்கையிலேயே பெயர் பிறழ்வு ஏற்பட்டுள்ளது. கோட்டாபய ராஜபக்ஷ என பொறிக்கப்பட வேண்டிய பெயரானது "குர்ட்டுபுர்யு ரூர்ஜபுக்ஷ" என குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில் தமிழில் பெயரை சரியாக குறிப்பிடாமை தொடர்பாக முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சார்பாக தாம் தமிழ் மக்களிடம் மன்னிப்பு கோருவதாக காலிமுகத்திடல் போராட்டத்தின் முன்னணி செயற்பாட்டாளரான அநுருத்த பண்டார தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்திடம் இருந்து சம்பளம் மற்றும் வசதிகளையும் பெறும் கோட்டாபய ராஜபக்ஷ; இந்த தவறை கட்டாயம் சரி செய்ய வேண்டும் எனவும் அநுருத்த பண்டார மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (ம-7)

## மாங்குளம்...

போதே குறித்த வெடிப்பு சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த சம்பவத்தில் மாரிமுத்து மணியம் (வயது-84) என்பவர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை சம்பவத்தில் படுகாயமடைந்த பார்த்தீபன் நிதர்சன் (வயது-6) எனும் சிறுவன் மாங்குளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சை பிரிவுக்கு மாற்றப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளை மாங்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,9,104)

## யாழ்.நகரில்...

பட்டுள்ளார்.

இராணுவ புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலை அடுத்து, இராணுவப் புலனாய்வுப் பிரிவினரும் யாழ்ப்பாணம் விசேட அதிரடிப் படையினரும் யாழ்.நகர் பகுதியில் விசேட கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு இருந்தனர்.

இதன் போது சந்தேகத்துக்கு இடமாக நடமாடிய நபர் ஒருவரை சோதனை செய்தபோது அவரிடம் 30 கிராம் ஹெரோயின் போதைப் பொருள் மீட்கப் பட்டுள்ளதோடு அவரும் கைது செய்யப்பட்டுள்ளார். (ம-7,9,33,60)

## வைத்...

எது.

தனங்கிளப்பு பகுதியைச் சேர்ந்த 78 வயதான முதியவர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,9,30)

## வீதியில்...

ளுக்கு அடிமையாகிய இருவரும் மோட்டார் சைக்கிளில் சென்று வீதியில் செல்வோரிடம் அலைபேசிகளை அபகரித்து விற்பனை செய்து வந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று யாழ்ப்பாணம் திருநெல்வேலி பகுதியில் வைத்து இருவரும் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் கூறினர்.

யாழ்ப்பாணம் பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் பரிசோதகர் ரி.மேனன் தலைமையிலான மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவினரே இந்தக் கைது நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

சந்தேக நபர்கள் இருவரும் இன்று யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர். (ம-7,9,33)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127



மெகா பவர்
திகதி 07/09/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1578
S 02 01 02 04 46
71099

தன நிதானய
திகதி - 2023.09.07
சீட்டிழுப்பு இலக்கம் - 1260
T 23 54 69 77 T
11220

Lucky 7
திகதி 07.09.2023
சீட்டிழுப்பு இலக்கம் 0056
L7 இலக்கம் 1 7
வெற்றி இலக்கினம் துலாம்
வெற்றி இலக்கங்கள் 9 0 7 8 6 4

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3472
சீட்டிழுப்பு திகதி 07.09.2023
F 16 20 27 68
F
36128

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.09.07
சீட்டிழுப்பு இலக்கம் 539
கன்னி 10 30 34 51 கன்னி

மஹஜன சம்பத
திகதி 2023/09/07
சீட்டிழுப்பு இலக்கம் 5230
Q 5 6 5 6 3 2

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2204 வர்ணம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 2023.09.07 தினம் வியாழக்கிழமை
07 20 27 56 N
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 65,363,204.40
99491 172

சனிதா
திகதி 2023.09.07 வெற்றி வாரம் 4365 வர்ணம் சிவப்பு
01 08 61 67 R
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.56,678,392.00
22340 279

ராசி
சீட்டிழுப்பு வாரம் 3916 வர்ணம் கபிலம்
சீட்டிழுப்பு திகதி 2023.09.07 தினம் வியாழக்கிழமை
31 42 50 57
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 8,357,460/-
35696 487

ஜய ரெக
திகதி 07.09.2023 வெற்றி வாரம் 1380
S 33 26 45 66 67
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 437,050,594.20
27056 372
DLB தொலை பேசி 011-2 333 546-47 Web : www.dlb.lk

சம்வர்தன வாசனாவ
உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 626 திகதி 2023-09-07 வர்ணம் நீலம்
E 13 15 25 04
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 11,005,144.00
DLB DEVELOPMENT LOTTERIES தொ. பே. 0112 333 548/47 Web: www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI
வியாழக்கிழமை
வெற்றி வாரம் : 2030
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 52,696,056/-
06 24 29 54 P
5 9 7 7 5 874


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலிவு விற்பனை

SILVER SHIELD

கடந்த 40 வருடங்களாக யாழ்.மக்களின் நன் மதிப்பைப் பெற்ற **SILVER SHIELD SOCKS** பாடசாலை மாணவர்களுக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கும் ஏற்ற நைலோன்/ கொட்டன் காலுறைகள் (SOCKS) மலிவு விலையில்

**மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளவும்**

உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து ஒருசில நிமிடங்களில் உங்கள் பணத்தை

WESTERN UNION MONEY TRANSFER | Ria | MoneyGram. money transfer

ஊடாக பெற்றுக்கொள்ளவும். (C-7187)

**ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்**
**303, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.**
**021 222 5392, 076 315 6470**

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 076 636 3378, 076 097 3127

## கொழும்பு விலையில்...
## யாழ் நகரில் கோழிகள் விற்பனைக்கு உண்டு

புறோயிலர், கல்பேட்ஸ், பேரன்ஸ் ஊர்க்கோழி, சேவல், விறாத்து குஞ்சுகள் மலிவு விலையில் விற்பனைக்கு உண்டு. முட்டைகள் அனைத்தும்ஒரே இடத்தில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.
(சுகாதார முறைப்படி சுத்தம் செய்து தரப்படும்)

- 1Kg புறோயிலரின் விலை - 1250/=
- 1Kg புறோயிலர் சுத்தம் செய்யப்பட்ட இறைச்சி, 24 மணிநேர சேவை

**நியூ சிற்றி பாம்**
**நியூ சிற்றி கோழிக்கடை**
இல.8, சின்னக்கடை
மார்க்கெட் குருநகர், யாழ்ப்பாணம். (16965)


## மருத்துவ...

மாறு பணிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா இந்த கட்டளையை நேற்று வழங்கினார்.

காய்ச்சல் காரணமாக தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்கு அழைத்துச் செல்லப்பட்ட 8 வயது சிறுமி யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

சிறுமியின் கையில் பொருத்தப்பட்ட ஊசி மருந்தை ஏற்றும் "கெனுலா" தவறாக பொருத்தப்பட்டதால், சிறுமியின் இடது கை பாதிப்புக்கு உள்ளான நிலையில் இடது கை மணிக்கட்டுடன், அகற்றப்பட்டது என்று மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

இந்த சம்பவத்தின் போது தவறு இடம் பெற்றமை தொடர்பில் உரிய விசாரணைகள் சுகாதார அமைச்சின் பணிப்பில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் தகுதிவாய்ந்த மருத்துவர்கள் குழுவினால் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இந்த நிலையில் பாதிக்கப்பட்ட சிறுமியின் தந்தை வழங்கிய முறைப்பாட்டின் அடிப்படையில் யாழ்ப்பாணம் தலைமையக பொலிஸாரினால் நேற்று நீதிவான் நீதிமன்றில் "பி" அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

பாதிக்கப்பட்ட சிறுமியின் தந்தையின் வாக்குமூலம் "பி" அறிக்கையில் விபரிக்கப்பட்டது.

நேற்று யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

பாதிக்கப்பட்ட சிறுமி சார்பில் முன்னிலையான சட்டத்தரணி திருமதி சர்மினி பிரதீபன் நீண்ட சமர்ப்பணத்தை மன்றில் முன்வைத்தார்.

அதனை ஆராய்ந்த நீதிமன்று, சிறுமியின் கை அகற்றப்படுவதற்கான காரணம் மற்றும் அதற்கான தவறிழைப்பு தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்கும் மூவரட ங்கிய தகுதிவாய்ந்த மருத்துவர்கள் குழுவைச் சேர்ந்த மருத்துவ வல்லுநர் ஒருவரினால் மன்றுக்கு நிபுணத்துவ ஆலோசனை வழங்குமாறு பணித்தது.

வழக்கில் பெயர் குறிப்பிடப்பட்ட தாதிய உத்தியோகத்தர் வெளிநாடு செல்வதற்கான தடைக் கட்டளை விண்ணப்பம் வழக்குத் தொடுநரான பொலிஸாரினால் முன்வைக்கப்பட்டது. அதற்கு அனுமதியளித்து நீதிமன்று கட்டளை வழங்கியது.

பொலிஸாரின் மேலதிக விசாரணை அறிக்கைக்காக வழக்கு செப்ரெம்பர் 18ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

(ம-7.9)


## காணி விற்பனைக்கு

கோண்டாவில் மேற்கு ஸ்ரேசன் வீதியில் (காளி கோயிலுக்கும் கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்திற்கும் இடையில்) 1 1/2 பரப்புக்களாக பிரிக்கப்பட்ட நிலையில் காணித்துண்டுகள் விற்பனைக்குண்டு. (16957)

**077 728 6061**

## தேவை

NLB, DLB லொத்தர் ரிக்கற்றுக்களை யாழ் நகரப் பகுதியில் விற்பனை செய்ய விற்பனையாளர் தேவை. (16971)

**077 603 1723**

## தவறவிடப்பட்டுள்ளது

உரும்பிராய் சித்த மருத்துவ நிலையத்தின் முன்பாக 568603354V இலக்கமுடைய தேசிய அடையாள அட்டை 2.9.2023 அன்று தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் 55/1 பழம் வீதி கந்தர்மடம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும். (16973)

**077 936 1568**

## Join Our Team

Are you a motivated and passionate individual looking to make a meaningful impact in the world? we have exciting opportunities waiting for you! Save a Life NGO is on the lookout for dedicated individuals to join our team and help us make difference in the lives of those in need.

**Position 1 : Project Coordinator**
**Position 2 : Project Officer**
**Position 3 : Financial Assistant**

If you're an active and driven youth ready to take on these roles, we want to hear from you!
send your CV to **savealife.ngo@gmail.com** and be part of our journey to make the world a better place. (16980)

## உடனடி வேலை வாய்ப்பு
### நிர்வாக உத்தியோகத்தர்

விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

**V2 TRAVELS**

எமது கிளைகள்
- கிளிநொச்சி
- சுன்னாகம்
- சாவகச்சேரி
- மானிப்பாய்
- நெல்லியடி
- பருத்தித்துறை
- திருகோணமலை
- வல்வெட்டித்துறை
- கோப்பாய்
- புத்தூர்
- பண்டத்தரிப்பு
- சங்கானை
- கொழும்பு

(C-7214)

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

## VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்
- ✓ ONLINE APPLICATIONS
- ✓ VISA APPOINTMENTS
- ✓ PASSPORT APPLICATION
- ✓ POLICE CLEARANCE

என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும். (C-7214)

VISA
• STUDENT VISA • TOURIST VISA
• SPOUSE VISA • SUPER VISA
கனடா ஐரோப்பா
ஜெர்மனி பிரான்ஸ்
லண்டன் சுவிஸ்
அமெரிக்கா

Srilankan Visa Extension வெளிநாட்டு Passport களுக்கு இலங்கை விசா நீட்டித்து தரப்படும்

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம். | V2 TRAVELS
0777-068-777

## புதிய பிரிவுகள் ஆரம்பம்

**வங்கியியல் கற்கை நெறிகள்**
Banking Courses
DBF & HDBF (16/09/2023)
(IBSL நிறுவனத்தின் மறுசீரமைக்கப்பட்ட பாடவிதானம்)

**கணக்காளர் கற்கை நெறிகள்**
Chartered Accounting Courses
Business Level I,II (16/09/2023)

**தொழிற்துறைக் கணக்காளர் ஆவதற்கு**
aat (Sri Lanka)
(AA1 - 09.09.2023) G.C.E O/L பெறுபேற்றினை எதிர்பார்த்திருப்பவர்களும் கற்கலாம்
**(AA2, AA3 -09/09/2023)** (C-7207)

**Certificate Course in English**

Further Details : Jaffna College
Undergraduate Dept.
464, Hospital Road, Jaffna.
021 222 3382/021 222 9149
077 440 5917

## காணிகள் விற்பனைக்கு உண்டு

காங்கேசன்துறை வீதியில் 2 பரப்பும் 5 பரப்பும் 4 பரப்பும் பலாலி வீதியில் 5 பரப்பும் 3 பரப்பும் ஆஸ்பத்திரி வீதியில் 6 பரப்புக் காணியும் கடைகளும் விற்பனைக்குண்டு.

**வாங்க விரும்புவோர் நேரடித் தொடர்பு கொள்ளவும்**

ராஜா சொத்து விற்பனை நிலையம்
தொடர்பு: (C-7213)

**077 603 3259**
MGR

## பொருளியற் கல்லூரி

நாவலர் றோட் யாழ்ப்பாணம். | K.K.S றோட் சுன்னாகம்.

**BARATHY** - சித்தன்கேணி

எமது மூன்று நிறுவனங்களிலும் கல்வி கற்று அதி உட்ச பெறுபேறுகளை பெற்று எமது நிறுவனத்துக்கும் உங்கள் பாடசாலைக்கும் பெருமைபீட்டி தந்த அனைத்து மாணவர்களையும் பாராட்டி வாழ்த்தி இது போல் நீங்களும் சிறந்த பெறுபேறுகளை பெற்றிட ஆரம்பமாகின்றது

**A/L DAY CLASS**
கலை - வர்த்தகப் பிரிவு

**ஆரம்பம் : 11.09.2023**
**திங்கள் 8.00 Am**
நாளை சனிக்கிழமை தொடக்கம் உங்கள் அனுமதிகளை பெற்றுக் கொள்ளவும். (16986)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.09.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org